# மலேஷியாவிலுள்ள இலங்கையரும் இந்தியரும் பொலிஸ் நிலையங்களில் தஞ்சம்

Registered as a Newspaper in Ceylon வார மலர் ★ ★ விலை சதம் 20

பாலக்காடு
RVG
பீடிகளையே
உபயோகியுங்கள்

# ஈழநாடு

EELA NADU

மில்க்வைற்
நீல சோப்
10 சதக் கட்டி
வாங்கி அதிக லாபம்
அடையுங்கள்

மலர் 11 சௌமிய வைகாசி 3 ஸபர் 28 (16-5-69) வெள்ளிக்கிழமை இதழ் 94

## 4 மாணவர்கள் சுட்டுக்கொலை
## பத்திரிகைகளுக்கு தடை

கோலாலம்பூர், மே. 15

மலேஷியாவிலுள்ள இலங்கையர்களும், இந்தியர்களும் பொலிஸ் நிலையங்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

மலேய்க்காரருக்கும், சீனருக்குமிடையில் மறுபடியும் தலைநகரில் பலத்த மோதல்கள் ஏற்பட்டுள்ளதைத்தொடர்ந்து இவர்கள் அஞ்சி நடுங்கி பொலிஸ் நிலையங்களில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மலேஷியாவில் பத்திரிகைகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கோலாலம்பூரில் மலேய்க்காரர்களுக்கும் சீனருக்குமிடையில் மறுபடியும் மோதல்கள் நடந்துள்ளது. சர்வதேச விமானப் போக்குவரத்துக்குமலேஷிய விமான நிலையம் மூடப்பட்டது.

கல்லூரியொன்றில் வைத்து மலேய் மாணவர் நால்வர் இன்று சீனரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

### "ஆச்சரியமில்லை"

கொழும்பு, வியாழன்

"வடக்கில் தமிழ்பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்தபோது எதிர்த்தவர்கள் இப்போது அரசாங்கம் பொறுப்பேற்கும்போதும் எதிர்ப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரசைச்சேர்ந்த திரு. வைரமுத்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

# "எதற்கும் ஆட்சியாளர் கையை நாடும் நிலை மாறவேண்டும்

## தமிழர் தம்மைத்தாம் ஆளும் போதுதான் உரிமை கிடைக்கும்'

### தீவுப்பகுதி எம். பி. யின் விளக்கம்

நமது காரியாலய நிருபர் பேட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

"இலங்கைவாழ் தமிழ் மக்கள் தமது பாஷையை உபயோகிக்கும் உரிமை தமது பிள்ளைகளுக்குத் தாம் விரும்பும் மொழியைக் கொடுப்பது, பரம்பரை பரம்பரையாக அருந்தி வரும் உணவுவகைகளைப் பெறுவது, தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்குத் தேவையான தொழில் விஷயங்கள், வாழ்க்கைக்குத் தேவையான உபகரணங்களைப் பெறுவது, என்பது போன்ற எந்தத் தேவையானாலும் சிங்கள ஆட்சியாளர்களின் கையை நாடி நிற்கும் நிலை மாறவேண்டும். இந்த நாட்டில் தமிழ் மக்கள் மானத்தோடும், மரியாதையோடும் வாழ



### ஆட்சி அமைப்பில் அடிமைகள்

சோல்பரி வகுத்த ஒற்றை ஆட்சி அரசமைப்புத் திட்டத்தின்கீழ் சிறுபான்மையாக இருக்கும் நாம் பெரும்பான்மையாக இருக்கும் சிங்கள மக்களுக்குச் சதாகாலமும் அடிமைகளாக இருக்க வேண்டுமென்பதை யாவரும் அறிவர். அதைத் திரும்பத் திரும்ப விளங்கப்படுத்த வேண்டியதில்லை. அதன் பலாபலன் என்னவென்றால் பரம்பரை பரம்பரையாக தமிழ்ப்பிரதேசங்களிலே வாழுகின்ற தமிழ்மக்களுக்கு எந்த ஒரு தேவை ஏற்பட்டாலும் அதைப்பூர்த்திசெய்வதற்கு சிங்கள மக்களினால் ஏற்படுத்தப்பட்ட சிங்கள ஆட்சியாளர்களிடம் நாம் கையேந்தி நிற்கவேண்டும்.

[...]ந்த 20 வருட காலசரி[...]திரமும், அனுபவமும் இந்த உண்மையை ஐயம் திரிபற நிலைநாட்டியுள்ளது. நமது பகுதிகளுக்கு ஓர் ஆ[...] வீ[...] பா[...]ம் அமைக்கவேண்டுமா? [...]

மாலை மரியாதை செய்து தூப திபம் காட்டித்தான் அதைப்பெறவேண்டும்.

முக்கியமான ஒரு விஷயம் கல்வி. நமது தமிழ்ப்பள்ளிக்கூடங்களிலே கல்வித்தரம் குறைந்துபோகின்றது ஆதலால் அதைச் சீர்படுத்த வேண்டும். அதற்கு ஆசிரியர் போதியளவு நியமனம் செய்யவேண்டும். விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கவேண்டும் என்றெல்லாம் நாம் தீர்மானித்தால் அது செய்யமுடியாது வடக்குக்கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் அத்தனைபேரும் ஏகோபித்த குரல் எழுப்பினாலும்கூட இவைகளைப்பெற முடியாது.

சிங்கள ஆட்சியாளர்களுடைய கை ஆட்கள் தமிழ்ப் பகுதியை வந்துபார்த்து "இவை ஒன்றும் தேவையில்லை" என்று அறிக்கை சமர்ப்பித்தால் அ[...]ான் முடிவு. இதுதான் இன்றைய நிலை.

### அவர்கள் தயவு தேவை

[...]காலத்தான் வாழ்க்[...] எந்தத் தேவையையும் பூர்த்திசெய்ய[...]யா [...]

இருக்கிறார்கள். சுருங்கச் சொன்னால்நமது பாஷையை உபயோகிக்கும் உரிமையிலென்றாலும்சரி, நமது குழந்தைக்கு நாம் விரும்பும் மொழியைப் போதிக்கும் விஷயத்திலும்சரி, நாம் பரம்பரையாக அருந்திவரும் உணவு விஷயத்திலும் சரி, நமக்கு அத்தியாவசியம் தேவைப்படுகின்ற உடை விஷயத்திலும் சரி, தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்குத் தேவையான உபகரணங்கள் என்றாலும் சரி, நாம் சிங்கள ஆட்சியாளர்களின் தயவைத்தான் நாடி நிற்கவேண்டியிருக்கிறது.

அவர்கள் விரலசைந்தால் தான் எமது பகுதிகளிலே ஏதாவது நடக்கும். ஆகவேதான் இந்த நாட்டில் தமிழ்மக்கள் மானத்தோடும், தங்கள் சொந்த உரிமைகளோடும் வாழவேண்டுமானால் தங்களைத் தாங்களே ஆளுகின்ற ஆட்சி முறை அமைக்க வேண்டும். எங்கள் ஆட்சியில்லாமல் எமது மக்களுக்கும் எமது பிரதேச அபிவிருத்திக்கும் எம்மால் ஒன்றும் செய்ய [...]

# இளைஞர் போதிக்கும் முதியோர் பாடசாலை

உடுப்பிட்டி, வியாழன்

துன்னாலையில் முதியோர் கல்வித்திட்டம் மகத்தான வெற்றியளித்துள்ளது. துன்னாலை தெற்கு தயாநிதி கிராம முன்னேற்றச் சங்கத்தால் தயாநிதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடாத்தப்பட்டு வரும் முதியோர் கல்வி வகுப்புகளை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலையங்களின் செயலாளரான திரு. சி. செல்லையாவின் முயற்சியின் பயனாக முதியோர் கல்வி வகுப்புக்களை அரசாங்கம் பாரமெடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இம்முதியோர் கல்விவகுப்புகளில் 125 பேர் கல்வி பயிலுகின்றனர். தற்போது துன்னாலைப்பகுதிப் படித்த இளைஞர்களே ஆசிரியர் பணியை இலவசமாகச் செய்து வந்தனர். இனிமேல் முதியோர் கல்விக்கென ஒரு ஆசிரியர் அர[...]

### பரத சங்க ஆண்டுப் பேரவை

கோட்டை, வெள்ளி.

அகில இலங்கை பரத சங்கத்தின் ஆண்டுப் பேரவை, இன்று கொழும்பு, கன்னாரத் தெருவில் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், சிலாபம் நீர்கொழும்பு மலையகம் முதலிய இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வரும் பிரதிநிதிகள் இதில் பங்குபற்றுகிறார்கள். அகில இலங்கை பரதசங்கத் தலைவர், வழக்கறிஞர் திரு. ஏ. ஈ. பிரான்ஸீஸ் பெர்னாண்டோ தலைமையில் நடைபெறும் இப் பேரவையில் திரு. ஏ. பி. வி. கோமஸ், திரு. சில்லையூர் செல்வராசன்' திரு. ஜோ. ஏ, எம். தாஸ் உட்பட பலர் உரையாற்றுவர்.

இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். வாழ்க்கைக்குத் தேவையான உபகரணங்களைப் பெறுவது, என்பது போன்ற எந்தத் தேவையானலும் சிங்கள ஆட்சியாளர்களின் கையை நாடி நிற்கும் நிலை மாறவேண்டும். இந்த நாட்டில் தமிழ் மக்கள் மானத்தோடும், மரியாதையோடும் வாழ



வேண்டுமென்றல், சொந்த உரிமைகளைப் பெறவேண்டுமென்றல் தம்மைத் தாமே ஆளுகி ற ஆட்சி முறையை அமைக்க வேண்டும். எங்கள் ஆட்சியில்லாமல் எமது மக்களுக்கும், எமது பிரதேச அபிவிருத்திக்கும் ஒன்றும் செய்ய முடியாது. இதற்குத் தமிழ் மக்களிடையே ஒரு தீவிர இயக்கம் வேண்டும். அதைத் தான் என் போன்றேர் சிலர் உருவாக்கச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றர்கள்'

தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்டவரான தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் 'ஈழநாடு' க்கு அளித்த விசேஷ பேட்டியொன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் பிரச்னை தமிழ் மக்களின் சுபிட்சமான வாழ்வு ஆகியனபற்றி இவரிடம் கேள்விகள் கேட்டபோது இலங்கையில் தமிழர்களுக்கெனத் தனித்தமிழ்நாடு பெற்றல் தான் தமிழர்கள் சுபிட்சமாக வாழமுடியுமென்றும், தமிழ்ப் பிரதேசங்கள் தொழில் வசதியிலும், பொருளாதாரத் துறையிலும் அபிவிருத்தியடையுமென்றும் குறிப்பிட்டதோடு தமிழ் இன விடுதலையைப்பெற அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு இயக்கத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். புதுப்புதுத் தலைவர்கள் இதன்மூலம் உருவாக வேண்டும். தமிழ் வாலிபர்கள் ஒன்று திரண்டு முன்வரல் வேண்டும் என்றும் பலதடவை வலியுறுத்திக் கூறினர்.

கேள்வி:- தமிழ் மக்களுக்குள் இப்போது இரண்டு கட்சிகளே இருக்கின்றன. இரண்டு கட்சிகள் இருப்பதால்தான் எதையும் பெற முடியாமலிருக்கிறதென்றும் ஆட்சிமன்றத்திலும் சரி அங்கும் போட்டி மனப்பான்மையென்றும் மக்கள் மத்தியில் அபிப்பிராயம் தோன்றி இரண்டு கட்சிகளையும் ஒற்றுமைப்படுத்த முயற்சிகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலையில் மூன்றுவது கட்சியை ஏன் ஆரம்பிக்க விரும்புகிறீர்கள்? இது தமிழ் மக்களுக்கு நன்மையைக் கொடுக்கும் என நினைக்கிறீர்களா?

பதில்:- இலங்கையில் வாழுகின்ற ஒவ்வொரு தமிழனுடைய மனத்திலும் இன்று ஒரே ஒரு கேள்விதான் எழுவதாக இருக்கின்றது. இநத நாட்டில் தமிழர்களுடைய எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது. தொடர்ந்தும் நாம் தமிழராக வாழ முடியுமா? இல்லையா? அல்லது சிங்களச் சமூகத்தோடு இரண்டறக் கலந்துதான் ஆக வேண்டுமா? இப்படியான கேள்விகளைச் சிலர் வெளியில் கூறலாம். ஆனல் பலர் மனதில் இருந்தபோதும் அவர்கள் வெளிக்காட்டாமல் இருக்கக் கூடும். அரசியலை எடுத்துக் கொண்டாலும் சரி, பொருளாதாரத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது சமய வாழ்க்கையைத்தான் எடுத்துக்கொண்டாலும் சரி எதிலும் தமிழர் அதலா பாதாளத்துக்குப் போகின்றர்கள் என்பதே பலரும் ஒப்புக்கொள்ளவேண்டிய ஓர் உண்மை.

இதற்குக் கட்சிகள் பல இருப்பதுதான் காரணம் என்று சிலர் கூறுவர். தமிழ் மக்களிடையே பல கட்சிகள்-ஒற்றுமையில்லை. எதற்கெடுத்தாலும், போட்டியும், வேறுபாடும் தலைதூக்கிக் கொண்டிருக்கின்றன என்பதும் பலரின் கருத்து. ஆனபடியால் தமிழருக்கு இனி விமோசனமுண்டா என்ற கேள்வியை எழுப்புகின்றர்கள்.

அரசியல் ரீதியில் எடுத்துப் பார்த்தால் தமிழ் மக்களுக்குள் இரண்டு கட்சிகள்தான். அவை தமிழரசும், தமிழ்க் காங்கிரசுமாகும். அதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை இங்கே புகுத்திஞல் என்ன என்பதைச் சிலர் கருதுகின்றர்கள் என்பதை மறுக்கவும் முடியாது. அதே போல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் தமிழ்ப் பிரதேசங்களில் புகுத்த முயற்சி நடைபெறுகின்றது. இடதுசாரிக் கட்சிகளிலே, மாஸ்கோ, சீன சார்புக் கம்யூனிஸ்டுகள், சமசமாஜிகளும்கூட தமிழ்ப்பகுதிகளில் இயங்குகின்றன.

இவற்றுள் தீவிர இடதுசாரிகளை விட மற்றெல்லாக் கட்சிகளும் ஆட்சிமன்றஸ்தானங்களைக் கைப்பற்றும் ஒரே நோக்கமுடையவை என்பது சொல்லாமலே விளங்கும். இந்த இடத்திதான் தமிழர் நன்றகச் சிந்திக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

# வியட்னும் சமாதானம்: நிக்சனின் 8 அம்சத் திட்டம்

வாஷிங்டன், மே. 15

வியட்னமில் அமைதியும் சமாதானமும் ஏற்பட அமெரிக்க ஜனதிபதி திரு, ரிச்சார்ட் நிக்சன் 8 அம்ச திட்டமொன்றை தெரிவித்துள்ளார்.

இந்தத திட்டத்தை ஹனேய் ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்காது விடலாம் எனத் தெரிவித்துள்ள அவர் சமாதானத்துக்கான இந்தத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் வேறு வழியையே நாடவேண்டியிருக்கும் என அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

திரு. நிக்சன் தெரிவித்துள்ள திட்டத்தில் 12 மாதங்களில் தென்வியட்னமிலிருந்து வெளிநாட்டுப் படைகள் வெளியோற்றய பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஹனேயும் வெளிநாட்டுப் படைகள் விலக்கத்துக்கு ஒத்துழைக்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டிருக்கிறர்.

நேர்மையான சுதந்திரமான தேர்தல் வியட்னமில் நடைபெறுவதற்கு வழி வமைக்கப்படவேண்டுமெனவும் இவர் தமது திட்டத்தில் தெரிவித்துள்ளார்.

திரு நிக்சனின் திட்டத்தை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. வில்லியம் றேஜர்ஸ் வியட்னமில் விளக்குவார்.

சரித்திரமும், அனுபவமும் இந்த உண்மையை ஐயம் திரிபற நிலைநாட்டியுள்ளது. நமது பகுதிகளுக்கு ஓர் ஆஸ்பத்திரிவேண்டுமா? வீ[...] திருத்தவேண்டுமா? பா[...] அமைக்கவேண்டுமா? சிங்கள ஆட்சியாளர்களுக்கு [...] முடிவு. இதுதான் இன்றைய நிலை.

## அவர்கள் தயவு தேவை

இதேபோலத்தான் வாழ்க்கையின் எந்தத் தேவையையும் பூர்த்திசெய்ய[...]யாமல் தமிழ் மக்கள் இன்று [...] மானல் தங்களைத் தாங்களே ஆளுகின்ற ஆட்சி முறை அமைக்க வேண்டும். எங்கள் ஆட்சியில்லாமல் எமது மக்களுக்கும் எமது பிரதேச அபிவிருத்திக்கும் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

# "சிங்கள பௌத்த பாடசாலை பிரச்னை அரசியல் பூச்சாண்டியே"

## யாழ். முற்றவெளிக் கூட்டத்தில் கம்பஹா எம். பி.

யாழ்ப்பாணம், வெள்ளி

"வடபகுதியிலுள்ள சிங்கள பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதும் அதனை எதிர்த்துத் தமிழரசுக் கட்சியினர் போர்க்கோலம் கொள்வதும் தேர்தல் தந்திரமே" என நேற்றிரவு யாழ். முற்றவெளியில் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியினரால் நடத்தப்பட்ட கூட்டத்தில் பேசிய கம்பஹா எம். பி. திரு எஸ் டி. பண்டாரநயகா தெரிவித்தார்.

மேதினத்தன்று சீனக்கம்யூனிஸ்ட்கட்சியினர் நடத்திய ஊர்வலத்தின்மீது பொலிசார குண்டாந்தடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைப்பிரயோகமும் நடத்தியதைக்கண்டித்து மேற்படி கூட்டம் நடந்தது. திரு. வி. ஏ கந்தசாமி கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

சுன்னகத்திலிருந்து இங்கு வந்து சேர்ந்த ஆர்ப்பட்ட ஊர்வலத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

# சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 246-வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

**முதல் பரிசு**

08 N 0148 ரூ. 89,000

**இரண்டாம் பரிசு**

14 Q 0775 ரூ. 35,600

**மூன்றும் பரிசு**

15 O 0040 ரூ. 8,900

தலா ரூ. 445-00 ஆறுதல் பரிசுபெறும் 100டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 25 A 0032 | 14 C 0624 |
| 35 A 0836 | 26 C 0135 |
| 03 A 0596 | 27 D 0483 |
| 37 A 0342 | 27 D 0833 |
| 03 A 0153 | 03 D 0798 |
| 03 A 0734 | 20 D 0510 |
| 09 B 0554 | 29 E 0075 |
| 20 B 0290 | 34 E 0775 |
| 13 B 0839 | 02 E 0895 |
| 12 E 0443 | 34 E 0128 |
| 24 J 0334 | 03 E 0460 |
| 09 K 0410 | 15 F 0572 |
| 17 K 0689 | 40 G 0275 |
| 26 K 0744 | 39 G 0767 |
| 40 G 0793 | 14 L 0739 |
| 01 G 0921 | 19 L 0735 |
| 31 G 0229 | 32 L 0634 |
| 30 H 0221 | 04 L 0246 |
| 19 H 0850 | 24 L 0956 |
| 05 H 0262 | 23 M 0112 |
| 15 J 0127 | 17 M 0373 |
| 21 J 0076 | 11 M 0259 |
| 08 J 0971 | 35 M 0849 |
| 24 J 0223 | 28 M 0830 |
| 10 R 0798 | 37 M 0428 |
| 09 R 0661 | 39 N 0935 |
| 29 R 0665 | 30 N 0633 |
| 19 R 0114 | 02 N 0660 |
| 39 R 0219 | 05 O 0780 |
| 03 S 0342 | 25 P 0127 |
| 37 P 0241 | 15 S 0423 |
| 13 P 0786 | 40 S 0948 |
| 39 P 0697 | 39 S 0849 |
| 27 P 0281 | 07 S 0590 |
| 35 P 0301 | 06 S 0855 |
| 13 Q 0234 | 13 T 0615 |
| 33 Q 0208 | 13 T 0083 |
| 04 T 0456 | 25 T 0961 |

| | |
|---|---|
| 05 X 0539 | 09 U 0468 |
| 06 X 0369 | 35 U 0187 |
| 30 X 0574 | 02 U 0036 |
| 04 Y 0173 | 13 U 0093 |
| 32 Y 0570 | 39 V 0823 |
| 01 Y 0584 | 31 V 0619 |
| 26 Y 0651 | 12 W 0142 |
| 09 Z 0443 | 30 W 0634 |
| 18 Z 0926 | 39 W 0402 |
| 19 Z 0614 | 01 W0283 |
| 16 Z 0350 | 29 X 0640 |
| 09 Z 0640 | 17 S 0943 |

இவை உறுதிப்படுத்தப்படவேண்டியவை.

# 2000பேர் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் உட்பட சுமார் 2000பேர் கலந்துகொண்டனர். சுன்னகத்தில்ஆரம்பமான இவ்வூர்வலத்தின் முன்னணியில், கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம், அட்வகேட் கே. வைகுந்தவாசன், திரு. வி. ஏ. கந்தசாமி, திரு. கே. டானியல், திரு. எஸ். வடிவுநாதன் ஆகியோர் சென்றர்கள்.

சுமார் ஒருமைல் நீளமான இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் சுன்னகத்தில் நேற்றுமாலை 4-30மணிக்குப் புறப்பட்டது. மாசேதுங்கின் பெரிய படமொன்று ஊர்வலத்தின் முன்செல்ல, அதைத்தொடர்ந்து கம்யூனிஸ்ட் தலைவர்களின் படங்களை எடுத்துச் சென்றனர். சுமார் நூறுபெண்களும் சிறுவர்களும் செங்கொடிகளையும் சுலோக அட்டைகளையும் தாங்கி அணியணியாகச் சென்றனர். இதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான வாலிபர்கள் ஆர்ப்பாட்டகோஷங்கள் எழுப்பியபடி சென்றர்கள்.

ஊர்வலத்தின் முன்னல் ஒரு டிரக்கிலும், இரண்டு ஜீப்பிலும் பொலிசார் சென்றனர். ஊர்வலத்தின் பின்னலும் ஒரு டிரக்கிலும் இரு ஜீப்களிலும் பொலிசார் சென்றனர்,

மே தினத்தன்று பொலிசார் ஊர்வலத்தினர்மீது நடத்திய தாக்குதலைக் கண்டித்து நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் பொலிசாருக்கு எதிரான சுலோக அட்டைகளைத்தாங்கிச்சென்றனர்.

அச்சுவேலி, சங்கானை, மட்டுவில், கரவெட்டி, காங்கேசன்துறை மற்றும் பல இடங்களிலிருந்து நூற்றுக்கணக்கான வாலிபர்கள் வான்களில் வந்து இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டதாக ஊர்வல அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

பயிலுகின்றனர். தற்போது துன்னலைப்பகுதிப் படித்த இளைஞர்களே ஆசிரியர் பணியை இலவசமாகச் செய்து வந்தனர். இனிமேல் முதியோர் கல்விக்கென ஒரு ஆசிரியர் அரசாங்கத்தினல் நியமிக்கப்படுவார். இம் முதியோர் கல்விப் பாடசாலை கல்வி இலாகாவின் கீழ் இயங்கும்.

முதியோர் கல்விக்கெனச் சிங்கள ஆசிரியர் ஒருவரையும் அனுப்புமாறு செயலாளர் திரு. சி. செல்லையா அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

வடமராட்சியிலேயே முதலாவது முதியோர் கல்விப் பாடசாலை இதுவேயாகும்.

திரு. செல்லையா [...] சன்' திரு. ஜோ. ஏ, எம். தாஸ் உட்பட பலர் உரையாற்றுவர்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பீடித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க வேலை ஸ்தலம் யாழ். முஸ்லிம் வீதியில் இன்று பிற்பகல் திறந்துவைக்கப்படவிருக்கிறது. யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. வி. கனகசபைதலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில்தபால் மாஅதிகாரி திரு. வேணன் அபயசேகரா உட்பட வேறுபல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு உரையாற்றுவர்,

# நமது நோக்கு

ஒரு நாட்டின், ஒரு வீட்டின் அல்லது ஒரு ஸ்தாபனத்தின் தலைவர் எப்படிப் பட்டவராக இருக்க வேண்டும்? என்பது பற்றீ திருதராஷ்டிரனுக்கு, அவரது நெருங்கிய உறவினரான விதுரன் சில நல்ல யோசனைகளைக் கூறியுள்ளார்.

பாரத காலத்தில் அதாவது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகக் கூறிய யோசனைகளானலும் அவை இன்றும் பொருத்தமாகவும் பயனுள்ளவையாகவு மிருக்குமாதலால் அவற்றைச் சற்றே கவனிப்போம்.

"ஒரு நிர்வாகத்தின் தலைவர் கர்வமோ, திமிரோ கொள்ளக்கூடாது. அப்படி ஆணவம் காட்டுபவர் தன் அழிவுக்கே வழிதேடிக் கொண்டவராவார்."

"ஒரு நல்ல நிர்வாகி ஒழுக்க சீலராகவும், நீதி நேர்மையுள்ளவராகவும், பிறரது துன்பங்களை உணர்ந்து, கருணையுடன் அவற்றைத் தீர்க்கத் தன்னலான தனைத்தையும் செய்பவராகவும் இருக்க வேண்டும். தங்கள் உற்றர் உறவினரென்று பாரபட்சம் காட்டாமல், நடுக்கண்ட நீதியுடன் நடந்து கொள்ளவேண்டும்..."

என்றெல்லரம் உபதேசிக்கிருர்.

இவ்வித நெறிகளுடன் கூடிய பொறுப்பு வாய்ந்த தலைமை எந்த நாட்டுக்கோ, ஸ்தாபனத்திற்கோ கிடைக்கின்றதோ அந்த நாடும் ஸ்தாபனமும்மிகச்சிறப்புற்று வளர்ந்தோங்குமென்பதில் ஐயமில்லை.

இன்று ஜனநாயக அமைப்பிலே பல ஸ்தல ஸ்தாபனங்களின்நிர்வாகம் சரிவர நடைபெறவில்லையாயின் அதற்கானபொறுப்பு பெரிதும் தலைவரைத்தான் சேரும். ஒரு தலைவரைத் தெரிவு செய்யும்போது, கட்சி, பணம், சாதி முதலியவற்றைக் கவனியாமல், நீதிநேர்மையுடன் நெறி தவருமல் நடப்பாரா என்ற ஒரே விஷயத்தைக் கவனித்து, தக்க தலைவரைத் தெரிவு செய்யும் ஊர்மக்களே நன்மை பெற முடியும்.

தங்கள் சுய நலத்துக்காக தலைமைப்பதவியைத் துஷ்பிரயோகம் செய்யும் தலைவர், பொது மக்களுக்கு மட்டுமன்றி தமக்கே அழிவு தேடிக் கொண்டவராவார்

விதுரன் கூறிய அந்த யோசனையை மன்னரான திருதராஷ்டிரன் கேட்டு, தன் மக்கள் மீது பாரபட்சம் காட்டாமல் நேர்மையாக நடந்திருப்பின், மகா பாரத யுத்தமே இல்லாது போயிருக்கலாம். ஆனல் செவிடன் காதில் ஊதிய சங்க நாதம் போல், அந்த உபதேசங்கள் பயனற்றுப் போயின. அதனல் பேரழிவு ஏற்பட்டது.

இலங்கையிலே இந்த ஜனநாயகம் வெற்றிபெற முடியுமா? சிறுபான்மையோர் நிம்மதியாக வாழ வழியுண்டா? நாடு அமைதியாக முன்னேறுமா என்ற சந்தேகங்கள் நம்மில் பலர் மனதிலும் இப்போது ஏற்பட்டுள்ளன. இதற்குச் சரியான பதில், மாகாதேசாதிசதி முதல், ஒரு கிராமச் சபைத் தலைவர் வரையிலே ஒவ்வொரு நிர்வாகத் தலைவரின் நேர்மையிலும், பாரபட்சமற்ற நிர்வாகத்திலும் கருணை உள்ளத்திலும்தான் பெரிதும் தங்கி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஈந்தவர் அல்ல(து) இருந்தவர் யாரோ ?'

கவியின்மூலம் சித்திரக் குள்ளன் வருவதைப் பாருங்கள். தன் சிறிய கைகளையும் கால்களையும் வீசி வரும் அவன் நடையைக்கூட கவி மூலம் பார்த்துவிடுகின்றோம். கம்பன் செய்யுளின் ஓசைப் பொலிவிலே இந்த வைகய விசித்திரக் குள்ளனாகிய பிரம்மசாரி தன்னை நோக்கி வருவதை அறிந்தான் மஹாபலி. உருவத்தைக்கண்டு மஹாபலி இகழ்ந்தானா?

அன்(று) அவன் வந்த(து)
அறிந்(து) உலகெல்லாம்
வென்றவன் முந்தி
வியந்(து)எதிர்கொண்டான்
'நின்தனில் அந்தணர்
இல்லை; நிறைந்தோய்
எந்தனில் உயர்ந்தவர்
யார் இனி' என்றான்.

அகில உலகையும் வென்ற சக்கரவர்த்தி எதிர்கொண்டு போனான், பார்த்ததும் பேரதிசயம் கொண்டான். அந்த

## கம்பர் கவி விருந்து

தேஜஸ்ஸிலே குள்ள உருவத்தைமறந்தான். 'ஸ்வாமி தங்களை விட உயர்ந்த அந்தணர் இல்லை. உம்மை எதிர்கொண்டு என்னைக்காட்டிலும் உயர்ந்துபோனவர் தான் யார் இருக்க முடியும்' என்று சொல்லிவிட்டான்.

இந்த உபசாரத்திற்கு எதிர் உபசாரம் சொன்னான் குள்ளனும். யாசகத்தில் என்ன மாட்சிதான் இருக்க முடியும்? எனினும் ''உன்னைப்போன்ற வள்ளலிடம் யாசிக்க வந்தவர்களே பாக்கியசாலிகள். மாட்சி மப்பட்டவர்கள்'' என்றான். ''அப்படி யாசகர்களுடைய விருப்பத்திற்கும் மேற்பட பொருள்களை வீசுகிறது உன்னுடைய நீண்டகை'' என்று அந்தக் கையையும் பாராட்டினான்.

மஹாபலிக்குச், சிந்தை மகிழ்ச்சியால் நிறைந்துவிட்டது. அப்போது அவன் ''என்ன செய்யவேண்டும் என்று கேட்பதும், விசித்திரக்குள்ளன் விசித்திரமாக

''இந்தக் கருங்குள்ளனை நம்பவேண்டாம். ஏனென்றால் இவன் குள்ளனே இல்லை!'' என்கிறார் சுக்கிராச்சாரியார்.

''கண்ட திறத்(து) இது
கைதவம்; ஐய
கொண்டல் நிறக்குறள்
என்பது கொள்ளேல்
அண்டமும் முற்றும்
அகண்டமும் மேனாள்
உண்டவன்: நீயி(து)
உணர்ந்து கொள்
என்றான்''

''உலகங்களை இறுதியில்லாத வானவெளியோடு ஒரு காலத்தில் பட்சணம்செய்துவிட்ட அந்த நெடியவன் தான் இன்று மூவடி மண் யாசிக்கிறான்!'' என்று ஆலோசித்துப் பார்த்து, 'தானம்செய்யாதே!' என்று தடுத்துவிடுகிறாராம் புரோகிதர்.

அதற்கு மஹாபலி, ''நீங்கள் ஒரு விஷயத்தை ஆலோசித்துப் பார்க்கவில்லையே, அதல்லவா முக்கியமானவிஷயம்?'' என்ற பீடிகையோடு பதில் சொல்கிறான்.

''நினைக்கிலை; என்கை
நிமிர்ந்திட வந்து
தனக்(கு) இயலாவகை
தாழ்வது தாழ்வில்
கனக்கரி ஈனது
கைத்தலம்-என்னில்
எனக்(கு) இதன்மேல்
நலம் யாதுகொல்?''

என்றான்.

''மஹாவிஷ்ணுவே! என்னிடம் யாசகத்துக்கு வந்துவிட்டாரென்றால் அதுவும் நல்லதுதானே! என்கை மேலும் அவன் கை கீழுமாக இருப்பதே, எனக்குப் பெருமைதானே, யோகம்தானே! தங்களுடைய ஆலோசனைக்கண்ணுக்கு இந்த அம்சம்புலப்படவில்லையே; ஆசார்ய ஸ்வாமிகளே!'' என்று குருவையும் உபேட்சித்துப் பேசுகிறான் வள்ளலாகிய மஹாபலி. தன் ஒரு கைக்குக் கீழே இரண்டு கைகள் தாழ்ந்துகிடப்பதைக் காண இந்தச் சக்கரவர்த்திக்குத்தான் எவ்வளவு ஆசை; எவ்வளவு பெருமை! மஹாபலியின் வண்மை மனித நீர்மையைக் கெடுத்துவிடும் என்ற கொள்கையோடுதான்,

ஆனால் செத்துப்போனவர்கள் யார்தெரியுமா? ''சாகமாட்டாமல் கைகளை ஏந்திக்கொண்டு திரிகிறார்களே யாசகத்துக்கு, அவர்கள் தான் செத்தவர்கள்'' என்கிறான். ''இரந்தவர் இறந்தவர்தான்'' என்று இகழ்ந்துவிட்டு, ''இறந்தவர்களிலும் கொடுத்தவர்களே இருந்தவர்கள் என்றும் இருப்பவர்கள்! இவர்களைக் காட்டிலும் சிரஞ்சீவிகளாய் இருப்பவர்கள் வேறுயார்?'' என்று தன் கொள்கையை எவ்

இராமாயண இரசிகமணி

### ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

(நல்லை ஆதீன கர்த்தர்)

வண்மையில்லையோர்
வறுமை இன்மையால்

என்று ஏற்கனவே கோசலை நாட்டைச் சிறப்பித்திருக்கிறான் கவிஞன். மேலும்தன் கொள்கையை வெளியிடுகிறான் பலிச்சக்கரவர்த்தி;

மாய்ந்தவர் மாய்ந்தவர்
அல்லர்கள்; மாயா(து)
ஏந்திய கைகொ(டு)
இருந்தவர், எந்தய்
வீந்தவர் என்பவர்
வீந்தவரேனும்
ஈந்தவர் அல்ல(து)
இருந்தவர் யாரோ?

''செத்துப்போனவர்களெல்லாம் செத்துப்போனவர்களில்லை!'' என்று அதிசயமாக ஆரம்பிக்கிறான். வளவு அழுத்தமாக வெளியிடுகிறான்!

சுக்கிராச்சாரியார் திகைத்துப் போயிருக்கவேண்டும். இதுவரையில் தம்மிடம் எவ்வளவோ பணிவாக நடந்துகொண்டசிஷ்யனுக்கு இப்போது எவ்வளவுகோபம் வந்துவிட்டது இந்தக் கோபத்திலும் ''என் தந்தை போன்ற குருவே!'' என்று தான் அழைக்கிறான். எனினும் கடைசியாக கொடுக்கிறவன் கொடுப்பதையும் தடுக்கிறாயே! நீ கொடியவன்!'' என்றே சொல்லிவிடுகிறான், குரு என்று கூப்பாராமல். இனி மேலே என்ன நடக்கிறது பார்ப்போம்.

(தொடரும்)

# பொருளாதார பலத்திற்கு உண்மை வேண்டும்

ஒரு நாடு முன்னேற வியாபாரத்தில் போட்டி நல்லதா என்பதைச் சிந்திக்கும்போது பொருளாதார வல்லுநர்கள் தவறு செய்துவிடுகிறார்கள். போட்டியின் காரணமாகப் பொருட்களை வாங்குபவர்களுக்கு குறைந்த கூலியில் தொழிலாளி கிடைத்து விடுகிறார். இதன்பயனாகப் பணக்காரன் பெரும் செல்வந்தனாகவும், ஏழை மேலும் ஏழையாகவும் ஆகிவிடுகிறான். கடைசியில் இந்த நிலையின் காரணமாக நாட்டிற்கு அழிவு ஏற்படக்கூடும். தொழிலாளிக்கு நியாயமான ஊதியம் கிடைக்க வேண்டும். அப்பொழுதும் ஒருவித போட்டி இருக்கலாம். ஆனால் மக்கள் சுகமாகவும் செழிப்பாகவும் இருப்பார்கள். ஏனெனில் அந்த நிலையில் தொழிலாளர்கள் ஒருவரைவிட மற்றவர் குறைந்த ஊதியத்தில் வேலைசெய்யவேண்டியிருக்காது. அதற்குப் பதிலாக புதுப்புது யுக்திகளைக் கண்டுபிடித்து கையாளவேண்டியிருக்கும். அரசாங்க ஊழியம் ஏன் கவர்ச்சியுள்ளதாக இருக்கிறது. உயர்ந்த தாழ்ந்த பதவிகளின் நிலையை அனுசரித்து அதற்கான ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருப்பதே அதற்குக் காரணம். அரசாங்க சேவையில் ஒருவர் மற்றவரைவிட குறைந்த ஊதியம் பெற்றுக்கொண்டு அதே வேலையைச் செய்யத் தயாராக இருக்கிறார் என்ற பேச்சுக்கே இடமில்லை. எனது எதிராளியைவிட நான் அதிக யோக்கியதாம்சம் உள்ளவன் என்று வேண்டுமானால் வாதிட முடியும். நில கப்பற்படை நிலையும் இதுவேதான். அங்கு ஒழுக்கக்குறைவுக்கோ, லஞ்சத்திற்கோ இடம் கிடையாது. ஆனால் விவசாயம் மற்றும் இதர தொழில்களிலும் ஒவ்வொரு நிலையிலும் போட்டியும், ஒழுங்கின்மையும் இருப்பதால் அங்கு ஏமாற்றுதலும் இதுபோன்ற மற்ற கெட்ட பழக்கங்களும் இடம்பெற்று விடுகின்றன. தரக்குறைவான பண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

முதலாளி, தொழிலாளி, பண்டங்களை வாங்குபவர்கள் ஆகிய இம்மூன்று சாராரும் தங்கள் சுயநலத்திலேயே கருத்தாக இருக்கிறார்கள். இதன்காரணமாகச் சமுதாய நடவடிக்கை முழுதும் நச்சுப் பரவி விடுகிறது. தொழிலாளி பட்டினியால் இறக்கிறான். வேலைநிறுத்தங்கள் மற்றொரு பக்கம் நடைபெறுகின்றன. தொழிற்சாலை முதலாளி கபடம் செய்யும் கீழ் நிலைக்குச் சென்றுவிடுகிறார். வாடிக்கையாளர்களும் தம்முடைய நடவடிக்கைகளில் தார்மீக அம்சத்தை நிராகரித்து விடுகிறார்கள். ஒரு அநீதியிலிருந்து பல அநீதிகள் உருவாகின்றன. முடிவில் முதலாளி தொழிலாளி வாடிக்கையாளர் எல்லோரும் நாசமாகி விடுகிறார்கள்.

உண்மையான பொருளாதாரம் நீதியை அடிப்படையாகக் கொண்டதுதான். நீதியும், நல்ல நடவடிக்கைகளும் உள்ளவர்களாக மக்கள் மாறக் கற்றுக்கொள்

## மகாத்மா காந்தி

வதைப் பொறுத்து அவர்களுடைய இன்பமும் பெருகும். அதற்கு மாறாக எப்படியாவது மக்களை எந்த முறையிலாவது செல்வந்தர்களாக்கி விடவேண்டுமென்று அவர்களுக்குப் போதித்தால் மனித இனம் முழுமைக்கும் மாபெரும் தீங்கு விளைவித்ததாகவே ஆகும்.

எந்தப் பொருளாதார சாஸ்திரம் பணத்தை வழிபடப் போதித்து, வலிமையற்றவர்களுக்கு தீங்கிழைப்பதன்மூலம் மற்றவர்கள் செல்வத்தைக்குவிக்க வழி காட்டுகிறதோ அந்தப் பொருளாதாரம் பொய்மையான பயங்கரமான நாசத்தை விளைவிக்கும் என்று தான் கூறவேண்டும். அது யமதூதன். இதற்கு மாறாக உண்மையான பொருளாதாரம் நீதியை நிலைநிறுத்தி கடையர்களும் உட்பட எல்லோருக்கும் ஒரேமாதிரி நன்மை பயக்கிறது. பண்பட்ட வாழ்க்கை வாழ இது மிகவும் தேவையானது.

(ஹரிஜன்)

# நாவலருக்கு நீதி வழங்கி தமக்கும் புகழ் தேடிய மகாலிங்க ஐயர்

## யாழ். மத்திய கல்லூரிக்கு ஓர் ஆலோசனை

யாழ்ப்பாணத்தில் கலாநிதி பீற்றர் பார்சிவலும் நாவலர் பெருமானும் ஒருங்கு சேர்ந்து செய்த பைபிள் தமிழ்மொழிபெயர்ப்பு, சென்னை பைபிள் சங்கத்தின் அனுமதி பெற்று அச்சில் பதிப்பிக்கக்கொண்டு செல்லப்பட்டபோது சென்

### ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

னையிலும் ஒரு தமிழ்மொழிபெயர்ப்பு முடிவடைந்திருந்தது. தங்கள் மொழிபெயர்ப்பே சிறந்ததென்றும் யாழ்ப்பாணத்தில் தூயசெந்தமிழ் கிடையாதென்றும் துறைபோகக் கற்ற தமிழ் வித்துவான்கள் யாழ்ப்பாணத்தில் கிடையாதென்றும் எனவே தமது மொழிபெயர்ப்பையே அச்சாக்க வேண்டுமென்றும், சென்னையார் வாதாடினர். சென்னையில் பல்கலைக் கழகமிருந்தது. பல உயர்தர கல்விக் கூடங்களிருந்தன. சென்னையிலுள்ள தமிழ் வித்துவான்கள் கல்விச் சங்கம் நிறுவி தமிழறிவை வளர்த்தார்கள். தமிழ், ஆங்கிலம், வடமொழி மூன்றையும் கற்றுத்தேறிய பெரும் புலவர்களிருந்தார்கள். அவர்களில் மழவை மகாலிங்க ஐயரும் ஒருவர்.

பரதகண்டத் தமிழ் நாட்டார் மத்தியில் யாழ்ப்பாணத்துத் தமிழ்பற்றி நாவலர் பெருமானுக்கு முன் தப்பபிப்பிராயம் இருந்தது. யாழ்ப்பாணத்தில் தூய தமிழ் கிடையாதென்றும் பெரும்புலவர் இல்லையென்றும், அவர்கள் எள்ளி நகையாடினர். நாவலர் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட பின், பரிதிமுன் பனிபோல அத் தவறான நம்பிக்கை அற்றுப் போயிற்று.

பார்சிவல் துரைமகனார் நாவலர் பெருமானது உதவியுடன் தாம் அரும்பாடுபட்டுச் செய்த தமிழாக்கம் ஏற்றுக் கொள்ளப்படாமல் தள்ளப்பட்டால் தமக்குப் பெரும் அவமானம் ஏற்படக்கூடுமேயென அஞ்சிஏக்கமுற்றார். பெருமானார் ஆறு

ழித் தேர்ச்சி பெற்று ஆசிரியனாயிருந்ததையும் அப்போது அவர்கள் அறியார். இருபத்துநான்கு வயதில் விவிலிய வேதத்தைத் தமிழாக்கம் செய்த செயற்கரிய செயலினை மழவை மகாலிங்க ஐயர் காய்தல், உவத்தலின்றி நடுவுநிலைமை தவறாது அஞ்சா நெஞ்சத்துடன் துணிந்து உலகறிய வெளிப்படுத்தினார். இரு பகுதியினராலும் மத்தியஸ்தராக ஒப்புக் கொள்ளப்பட்டவர் அவர். மகாலிங்க ஐயர் இரு தமிழ் மொழிபெயர்ப்பையும் விவிலிய மூலத்துடன் ஒப்புநோக்கிய பின் நாவலர் பெருமானது மொழிபெயர்ப்பே சிறந்ததென்ற முடிவுக்கு வந்தார். யாழ்ப்பாணத்துத் தூய செந்தமிழ் நடையை மெச்சினார். பெருமானைக் கண்டு அளவளாவினார். பெருமானுக்குத் தமிழ்நாட்டில் கிடைத்த முதல் வெற்றி இது. இதனையடுத்துத் தமிழ் நாடெங்கும் நாவலர் பெருமானது புகழ் காட்டுத்தீ போல் பரவலாயிற்று. நாவலர்பெருமானது வரலாற்றில் மழவை மகாலிங்க ஐயரின் பெயர் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்டிருக்கிறது.

# விரக்தியும் தாழ்வு மனப்பான்மையுமே வாழ்வை நரகமாக்குகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாபலிக்குச், சிந்தை மகிழ்ச்சியால் நிறைந்துவிட்டது. அப்போது அவன் ''என்ன செய்யவேண்டும் என்று கேட்பதும், விசித்திரக்குள்ளன் விசித்திரமாக யாசகம் கேட்பதும், உடனே மஹாபலியின் குருவாகிய சுக்கிராச்சாரியார் 'கொடாதே!'' என்று தடுப்பதும், எவ்வளவு விரைவாக நடைபெற்றுவிட்டன. '

''சிந்தை உவந்(து) எதிர்
''என்செய?'' என்றான்
அந்தணன் ''மூவடி மண்
அருள்; உண்டேல்
வெந்திறலாய்! இது
வேண்டும்'' எனுமுன்,
தந்தனன் என்றனன்,
வெள்ளிதடுத்தான்''
''நான் என்ன செய்ய?''

என்று மஹாபலி கேட்டதுதான் தாமதம், பிரம்மசாரி ''மூன்றுஅடி மண் உத்தரவு செய்யவேணும்'' என்று பளிச்சென்று கேட்டு விட்டான். தன் சிறிய காலால் அளந்து கொள்ளக் கூடிய மூவடி மண்தான்! அதுவும், 'உன்னிடம் உள்ளதானால் கொடு'' என்றான். ''உனக்கு வசதியில்லையென்றால் கொடுக்க வேண்டாம். என்பது குறிப்பு. அந்த மூவடி மண்ணும் தனக்கு வேண்டும் என்று தெரிவித்தான். குள்ளன் சொல்லி முடிப்பதற்கு முன்னமே அவ்வளவு விபரங்களையும் கூடக் காதில் போட்டுக் கொள்ளாமல் ''தந்தேன்'' என்றான் மஹாபலி. ''தடுத்தேன்'' என்றார் சுக்கிராச்சாரியார். 'யாசகமா இது? வஞ்சகம்!' என்று கருதிய சுக்கிராச்சாரியார், அந்த யாசகன் யாசித்து முடிப்பதற்குள்ளேயே 'தடுத்தேன்' என்று சொல்லிவிட்டார். ஆனால் அதற்கும் முந்திவிட்டது ''தந்தேன்'' என்ற வாக்கு.

இந்தப்பாட்டிலே மஹாபலியைப் பிரம்மசாரி ''வெந்திறலாய்!'' என்று அழைப்பது கவனிக்கத்தக்கது. ''கொடிய பலத்தோடு கூடிய சக்கரவர்த்தியே!'' என்பது பொருள். அப்படியானால், பலம் கொடுமையானதா? இல்லை மஹாபலியின் மகாபலமும் அவசியந்தான். ஆனால் அதை அசுரரைப் போல் உபயோகிப்பதுதான் தவறு'' என்றார் ஒரு மகாகவி. மஹாபலியைப்போல் ''வலிமையே உரிமை'' என்று நம்பி, மண்ணையும் விண்ணையும் அபகரித்துக் கொண்டு சக்கரவர்த்தியாகிப் பூமியையும் ஜனங்களையும் அடிமைப்படுத்தியது குற்றம்தானே. கொடுமைதானே?

# விரக்தியும் தாழ்வு மனப்பான்மையும் வாழ்வை நரகமாக்குகின்றன

**'வாழ்க்கையில் நிம்மதி' என்பது வாழ்நாளில் ஒருவனுக்குக் கிடைக்கக்கூடியமிகப் பெரிய செல்வம். அரிய பொக்கிஷம். அதைப் பெறுவதற்காக ஒருவன் எவ்வித தியாகத்தையும் செய்யலாம். ஆழ்ந்து யோசித்தால் வாழ்க்கை என்பது நமது மனத்திலேயே தங்கியிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம். வாழ்க்கையின் ஆசாபாசங்கள், இன்ப துன்பங்கள் ஏற்றத்தாழ்வுகள் அனைத்துக்கும் மனமே காரணம். மனத்தைப்பக்குவப்படுத்திக்கொண்டால் இவை அனைத்தும்தூசுக்குச்சமானம். மனத்தை அப்படிப்பக்குவப் படுத்துவதற்கு இக்கட்டுரை ஓரளவு துணைசெய்யலாம்.**

# வாழ்க்கையில் நிம்மதி வேண்டும்; எல்லோரும் அதனைப்பெறமுடியும்

**— திருமதி பார்வதி நாகலிங்கம் —**

வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் அல்லது ஒரு விளையாட்டு. எப்படி வாழ்கிறோம் என்பதைப்பொறுத்தது இந்த முடிவு.

வாழ்க்கை சிலருக்கு நரகமாக இருக்கிறது. இதன் மர்மம் என்ன? வசதி படைத்தவர்களுக்கு வாழ்க்கை சொர்க்கமாகவும் வசதியற்றவர்களுக்கு அது நரகமாகவும் இருக்கிறது என்றும் சொல்லிவிடமுடியாது. ஏனெனில் சிலவேளைகளில் செல்வந்தருக்கு வாழ்க்கை நரகமாகவும் ஏழைக்கு வாழ்க்கை சொர்க்கமாகவும் இருப்பதை நாம் கண்கூடாகக் காணமுடிகிறது.

மேலும், நமது வாழ்நாளில் ஒவ்வொரு காலகட்டத்திலும்வாழ்க்கையின் தன்மை மாறுபடவும்செய்கிறது. இளமைப்பருவத்தில் இன்பமயமாகஇருந்தவாழ்க்கைகுடும்பபாரத்தை ஏற்றுக்கொண்டதும் துன்பமயமாக மாறிவிடுகிறது. வாலிபப் பருவத்தில் தேனுக்இருக்கும் வாழ்க்கை வயோதிபப் பருவத்தில் வேம்பாகக் கசக்கிறது. இது என்ன புதிர்?

வாழ்க்கை ஒரு புதிரா? ஆம். புரிந்துகொள்ளமுடியாதவர்களுக்கு வாழ்க்கை ஒரு புதிர்தான். ஆனால் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்போமானால் வாழ்க்கை கசப்பதும் இனிப்பதும் நம் மனத்திலேயே தங்கியிருக்கிறது என்பதுபுரிந்துவிடும்.

வாழ்க்கையில் ஏற்படும் சுக துக்கங்களை நம் மனம் எப்படி ஏற்றுக்கொள்கிறது என்பதிலேயே வாழ்க்கையின் தன்மை அடங்கியிருக்கிறது. ஒரு சின்ன உதாரணம்:

நமது பையிலிருந்து ஒரு ரூபாய் எப்படியோ நம்மை அறியாமல் தொலைந்துவிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். 'அடடா, ஒரு ரூபாய் அநியாயமாகப் போய்விட்டதே' என்று திரும்பத்திரும்ப அதையே எண்ணி வருந்திக்கொண்டிருப்பதா அல்லது போனால் போகிறது. ஒரு ரூபாய் தானே, செலவழிந்ததுஎன்று நினைத்துக்கொள்வோம், இனிமேல் கவனமாக இருப்போம்' என்று மனதைத் தேற்றிக்கொண்டு நிம்மதியாக இருப்பதா? எது அறிவுடமை?

தெருவில் நடந்துபோகும் போது ஒரு சைக்கிள்மோதிவிடுகிறது. கீழே விழுந்து நல்ல காயம். 'ஆகா, இந்த மட்டும் தப்பினேமே!' என்று மனதைத் தேற்றிக் கொள்ளுவதா அல்லது 'ஐயையோ, என்ன கஷ்டகாலம், இது கிரகப் பகையோ' என்று அங்கலாய்ப்பதா? எது புத்திசாலித்தனம்?

இன்பமும் துன்பமும் மனத்திலேயே தங்கியிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு என்னசொல்லவேண்டும்?

வாழ்க்கையில் ஏற்படக் கூடிய பிரச்னைகள் அத்தனைக்கும் அவை மலைபோலிருந்தாலும் சரி, கடுகத்தனை இருந்தாலும்சரி இதுவே வாய்பாடு. இதுவே அடிப்படைத் தத்துவம்.

வாழ்க்கை மனத்திலேயே தங்கியிருக்கிறது என்று சுலபமாகக் கூறிவிட்டோம். ஆனால் அதைப் புரிந்து கொண்டு நடப்பது அவ்வளவு சுலபமல்ல. சிரம சாத்தியமானது அந்த முயற்சி.

எந்த விஷயத்திலும் புத்தி சொல்வது எளிது. ஆனால் அதைக் கடைப்பிடிப்பதும் அதன்படி ஒழுகுவதும்தான் சிரமம். 'வாழ்க்கையில் நிம்மதி' என்பது கிடைத்தற்கரிய பெருஞ்செல்வம். அப்பெருநிதியத்தை அடைவதற்காக எத்துணை சிரமத்தையும் சகித்துக்கொள்ளலாமல்லவா?

ஒரு கணம் கண்ணைமூடிக் கொண்டு யோசித்துப்பார்ப்போம்:

'இந்த உலகம் என்பது என்ன? இந்த உலகத்தில் நாம் எங்கிருக்கிறோம். இதில் எவ்வளவு காலம் இருப்போம்? இந்த உலகத்தில் வாழ்ந்து முடிந்தபின் நாம் எங்கு செல்வோம்? இந்த உலகத்துக்கு வருமுன் நாம் எங்கிருந்தோம்?'

குழப்பம்; ஒரே குழப்பம்.

இவ்வளவுகுழப்பம்நிறைந்தபோதிலும் நாம் வாழும் வாழ்க்கைமட்டும் சத்தியமானது. மதிப்புள்ளது. ஆம், இவ்வுலகில் நாம் வாழும் வரை வாழ்க்கைக்குரிய மதிப்பை நாம்கொடுத்தேயாகவேண்டும். வாழ்க்கையை நாம் அனுபவித்தேயாகவேண்டும்.

மனிதன் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே இறைவன் அதை இவ்வளவு உன்னதமாகப் படைத்தான். அதற்காகவே இந்த இனிய உலகையும் இறைவன் படைத்துக் கொடுத்திருக்கிறான்.

எல்லையற்ற பிரபஞ்ச வெளியில் எத்தனையோ கோடி உலகங்கள் ஊசலாடுகின்றன சூரியனைவிடப் பல நூறுமடங்கு பெரிய நட்சத்திரங்களும் கோள்களும் சுழன்றுகொண்டேயிருக்கின்றன. இவற்றைச் சுற்றி இவற்றோடு கூடிய கிரகங்களும் உப கிரகங்களும் அவற்றைச்சுற்றி வேறு கிரகங்களும் இடைவிடாது சுற்றிச்சுழன்றுகொண்டே இருக்கின்றன. இவையெல்லாம் பொய்யல்ல என்பதற்கு வானசாஸ்திரிகளின் ஆராய்ச்சிகளும் அவற்றின் அடிப்படையில் இன்று முன்னேறியிருக்கும் விண்வெளி யாத்திரைப் பெறுபேறுகளும் சான்று பகர்கின்றன.

பிரபஞ்சவெளியிலே சுழல்கின்ற கோடிக்கணக்கான நட்சத்திரங்களில் மிகச்சிறியதாகிய சூரியன், அதைச் சுற்றிச் சுழல்கின்ற துகள்களில் மிகச் சிறியதாகிய நமது பூமி, அதில் உள்ள நாடுகளில்மிகச் சிறியதாகிய நமது நாடு. அதில் வதியும் கோடிக்கணக்கான மக்களில் ஒருவர் தூசுக்குச் சமம். ஆனால் அந்த ஓர் உயிரின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளும் மனப்போராட்டங்களும் சூறவளியும் எரிமலையும் கொந்தளிப்பும் பிரளயமும் இன்னொரு பிரபஞ்சத்துக்கே சமமானது.

அதுமட்டுமா? கோடானுகோடி வருடங்களாக வெடிப்பதும் சிதறுவதும் எரிவதும் கருகுவதுமாக இயங்கிக்கொண்டிருக்கும் பிரபஞ்சத் துகள்களில் ஒரு கொஞ்சக்காலமே —அதாவது சில நூறு வருடங்கள் மட்டுமே-சுழலக்கூடிய உலகத்தில், ஒரு சில வருடங்கள் மட்டுமே வாழக்கூடிய ஒருமனிதனின் வாழ்வுக் காலத்தை எதற்கு ஒப்பிடுவது? இமைவெட்டும் நேரத்தில் கோடியில் ஒரு பகுதிக்குத்தானும் ஒப்பிடலாமா என்பது சந்தேகமே. ஆனாலும் மனிதன் வாழும் அந்த சொற்பகாலமே ஒரு பிரபஞ்சச் சுழற்சிக் காலத்துக்குச் சமமான அளவு போராட்டங்கள் நிறைந்ததாக அமைந்து விடுகிறது அல்லவா? இறைவனின் சிருஷ்டி விநோதத்தை என்னவென்று சொல்வது?

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ஒரு பிரபஞ்சத்துக்குச் சமம்.

ஏனைய கிரகங்களில் வாழும் உயிர்களைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. ஆனால் பூமியில் வாழ்கின்ற உயிர்களில் மனிதன் சிறந்தவன் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

மனிதனுக்கு இறைவன் கொடுத்திருக்கும் கொடைகளை எண்ணிப் பார்க்கும் போது இறைவனின் கருணையை வியக்காமல் இருக்க முடியாது. வாழ்க்கையிலை ஒவ்வொரு அணுவையும் ரசிப்பதற்கென்றே இறைவன் இத்தனை கொடைகளையும் அளித்திருக்க வேண்டும். அழகு நிரம்பியதாக இந்த உலகைப் படைத்து அந்த அழகை ரசிப்பதற்கேற்ற ஐம்புலன்களையும் படைத்து எல்லாவற்றுக்கும் மேலாக உணர்ச்சி என்ற ஒன்றையும் படைத்து மனிதப் பிறவியை எவ்வளவு உயர்ந்ததாக ஆக்கிவிட்டான் இறைவன். 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றார் ஒளவையார். ஆனால் மானிடர் என்றாவது இதைச் சிந்தித்துப்பார்த்ததுண்டா?

## வாழ்க்கை வாழ்வதற்கே

'எத்தனைகோடி இன்பம் வைத்தாய் இறைவா?' என்று பாடினான் பாரதி. காடும், மலையும், கடலும், நதியும், மரம், கொடி, செடிகளும், மலர்களும், பறவைகளும் நோக்க நோக்கக்களி கொள்ளும் உள்ளம் பாரதிக்கு. ஏழ்மையில் உழன்று அந்நிய ஆதிக்கக் கெடுபிடிகளில் குமைந்து வாழ்க்கை முழுக்க ஒரே பிரச்னை மயமாக இருந்தது பாரதிக்கு. ஆனாலும் வாழ்க்கை இன்பமானதாகவே இருந்தது அவருக்கு. வாழ்க்கையைப் புரிந்து கொண்டவர் அவர். ஆனால் நம்மில் பலர் காலில் ஒருசிறு முள் குத்தினாலும் உலகத்தையும் கடவுளையும் திட்டுவதற்குத் தயங்கமாட்டோம். சதா உலகத்தைத்யும் கடவுளையும் சமூகத்தையும் தூட்டுவதிலேயே வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்கிறவர் பலர். வாழ்நாள் முழுக்க கடவுளை மறந்திருக்கிறவர்களும் ஏதாவது ஒரு சோதனை ஏற்படும் போது கடவுளைத் தூற்றத் தயங்குவதில்லை. சோதனை ஏற்படும்போதுதான் மனிதப்பிறவியையும் குறை கூறுவர். எவ்வளவு நன்றி கெட்ட செயல்!

நம்மை உருவாக்கிவிட்ட பெற்றோர் நமது நன்மை கருதி நம்மைக் கண்டிக்கும்போது, அவர்களை நாம் தூற்றுவது எவ்வளவு அறியாத்தனமானது. இறைவனைத் தூற்றும் மானிடரின் அறியாமையும் அத்தகையதே.

மானிடரின் பருவங்களைப் பற்றி கவிஞர்கள் வர்ணித்திருக்கின்றனர். குழவிப் பருவம், பிள்ளைப்பருவம், இளமைப்பருவம், வாலிபப் பருவம், முதுமைப்பருவம், வயோதிபப்பருவம் என்பவையே அவை. இவற்றுள் முதல் மூன்று பருவங்களுள்ளும் எவ்வித பிரச்னை

(5ம் பக்கம் பார்க்க)

அறநெறிக் காவலர்

# முதலியார் செ. முத்துத்தம்பி

நாவலர் பெருமானது உதவியுடன் தாம் அரும்பாடு பட்டுச் செய்த தமிழாக்கம் ஏற்றுக் கொள்ளப்படாமல் தள்ளப்பட்டால் தமக்குப் பெரும் அவமானம் ஏற்படக்கூடுமேயென அஞ்சிஏக்கமுற்றார். பெருமானார் ஆறுதல்கூறி அவரைத் தேற்றினார். ''சென்னைத் தமிழ் நடைக்கு யாழ்ப்பாணத்துத் தமிழ்நடை குறைந்ததல்ல. எமது தமிழாக்கத்தில் சொற்பிழை, எழுத்துப் பிழை கிடையாது. நான் வாதாடி இவ் விஷயத்தில் நிச்சயம் வெற்றி காண்பேன்'' எனப் பெருமான் உறுதி கூறினார். நாவலர் பெருமானுக்கு அப்பொழுது இருபத்துநான்கு வயது தானிருக்கும். அப்பொழுது அவரை ஐந்தாங்குரவரென்றும் அவதார புருஷரென்றும் யாரும் அறிந்திலர். நீறு பூத்த நெருப்பைப் போன்று காணப்பட்டார். பெருமான் மூன்று வயதில் கடவுளைக்கூவி அழைத்ததையும், ஒன்பதே வயதில் தமது தந்தையார் எழுதிக் குறையில்விட்ட நாடகத்தை அவர் நிறைவு செய்த அதிசயத்தையும் பதினாறு வயதில் மும்மொ

மானது புகழ் காட்டுத்தீ போல் பரவலாயிற்று நாவலர்பெருமானது வரலாற்றில் மழவை மகாலிங்க ஐயரின் பெயர் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அநீதிகள் மலிந்த இந்நிலவுலகத்தில் புலவரேறு மகாலிங்க ஐயரைப்போல ஒருவரைக் காண்பது அரிதினும் அரிதேயாம். ஐயர் பரத கண்டத் தமிழ்நாட்டவர். அங்குள்ளவர்கள் சென்னை மொழிபெயர்ப்பே ஏற்கத் தக்கதென்று வாதாடினர். ஐயரும் சுலபமாகச் சென்னை மொழிபெயர்ப்பே ஏற்கத் தக்கதென்று சொல்லியிருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லை. நாவலர் தோல்வியுற்றிருந்தால் நிலைமையெப்படி மாறிருக்குமென்று நாங்கள் உய்த்து உணரவேண்டும். மழவை மகாலிங்க ஐயரின் திவ்விய நாமம் இவ்வுலகத்தில் மங்காது நின்றுநிலவுக.

இந்த விதத்தில் ஒரு முக்கிய விஷயம் சிந்திக்கற்பாலது. யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரி தொடங்கி கிட்டத்தட்ட நூற்று நாற்பது ஆண்டுகள் இருக்கும். இந்தக் கல்லூரியில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் கற்று வெளியேறியிருப்பார்கள். ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் கல்வி கற்பித்திருப்பார்கள். அப்படியிருக்கவும் நாவலர்பெருமானைப் போல ஒரு மாணவன் அந்தக் கல்லூரியில் படித்ததும் கிடையாது. அவரைப் போல இன்னுமொரு ஆசிரியர் இருந்ததும் கிடையாது. அந்தக்கல்லூரி மண்டபத்தில் எத்தனையோபேர்களது படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றபோதிலும் நாவலர்பெருமானின் படம் வைக்கப்படவில்லை. இது மிக விசனிக்கத்தக்கதே. இப்போது அந்தக் கல்லூரியில் புதுக்கட்டடங்கள் போடப்பட்டுவருகின்றன. அதிலொரு மண்டபத்திற்கு 'நாவலர்பெருமான் மணிமண்டபம்' என்று பெயர்வைத்து, அதில் அவருடைய திருவுருவப் படத்தை வைப்பது, இதுவரை அக்கல்லூரி செய்யத் தவறிய ஒரு நற்காரியத்தைக் காலங்கடந்தாவது நிறைவேற்றுவதாக அமையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைச் சிறுகாவியம்

# வெள்ளமும் உள்ளமும்

வெட்டியூர் தனில்வாழும் ஏழைபொன்னன்
விலாவொடியப் பாடுபடும் அவனின் கும்பி
ஒட்டிஉல ராதிருக்க உண்ணும் சோறு
ஒருவேளை கிடைத்திட்டால் அதிட்டமேதான்
வட்டிக்குப் பணம்கொடுப்போர் நெஞ்சம்போல
வரட்சிமிகக் கொண்டஅவன் வாழ்வை எண்ணி
பட்டிக்குள் அடைபட்ட மாடுபோல
பகலிரவாய் அவன்நெஞ்சம் அசையைப்போடும்

தனிமையாய் இருந்திட்டால் கவலை கொஞ்சம்
தளிருடலாள் அவளொருத்தி துணையாய் வந்தாள்
பனிமலரைப் போன்றஇரு மகவைப் பெற்றாள்
பக்குவமாய் அவர்நலத்தைப் பேணிக் காக்க
நனிவருவாய் அவனிடத்தில் ஏது?ஏது?
நடைப்பிணமாய் நலம்குன்றி வாடும்போது
குனிந்தவனை மேன்மேலும் குட்டல்போல
கொடுமைபல செய்சமூகம் குட்டிற் றன்றே.

மணம்முடித்த போதுஅவன் மாமன் தந்த
மாடிரண்டு ஈரைந்து பட்டி தோட்டம்
குணத்தினையே அணிகலனாய்க் கொண்ட மாது
குன்றனைய அவன்தோள்கள் குலையா நெஞ்சம்
கணத்தினிலே பெருவெள்ளம் அடித்துப் போகும்
கனமில்லாச் சிறுகுடிசை இவைதாம் சொத்து
நிணந்தின்று உடல்வளர்க்கும் கழுகைப் போல
நிறைசொத்தாம் பொதுப்பணத்தை ஏப்பம் விட்டு

குன்றனைய செல்வத்தைச் சேர்த்து வைப்போர்
குடிசையெனில் தூசென்பர் இயல்பு தானே
நன்றென்று தூயவர்கள் சொல்வதெல்லாம்
நீசர்க்குத் தூசுதான் மறுப்பா ரில்லை
கன்றழுதால் பசுவதுவும் கதறி நிற்கும்
கடும்புலிக்கு இரைகிடைக்கும் என்ற இன்பம்
நின்றுலகு வாழ்வதற்குப் பாடு பட்டோர்
நிறைபரிசாய்ப்பெற்றதெல்லாம் துன்பம்! துன்பம்!!

மார்கழியில் பயிரெல்லாம் விளையும் காலம்
மகிழ்ச்சிதனில் உழவர்உளம் திளைக்கும் வேளை
ஆர்த்தெழுந்தே அடித்ததய்யோ சூறைக் காற்று
அடைமழையும் முன்கூட்டி உதவி நல்க
போர்த்திறமை மிகக்கொண்ட அழிவ ரக்கன்
புல்பூண்டு முதற்கொண்டு உயிரையெல்லாம்
வேர்என்றும் கிளைஎன்றும் பார்த்தி டாதே
வீழ்த்தியே பெருங்களிப்பில் ஆழ்ந்து நின்றான்.

அழிவரக்கன் தூண்டுதலால் வெள்ளம் வந்தே
அதிவிரைவாய்ப் பொன்னனது குடிசை தன்னை
அளியெதுவும் காட்டாதே அடித்துப் போக
அவலநிலை தனில்பொன்னன் மனைவி யோடு
விழிநிகர்த்த குழந்தைகளைத் தோளில் கொண்டு
வெள்ளத்தைக் கிழித்துமே நடந்து சென்று
கழிபெருகி அழிக்காத கட்டிடத்தில்
கவலைதோய் நெஞ்சோடு கலங்கி நின்றான்.

உயிர்மட்டும் தப்பினல் போதும் என்றே
உடைமைகளை வெள்ளத்திற் கிரையாய்த் தந்து
பயிர்நிறைந்த தோட்டமெலாம் பாழாய்ப் போக
பரந்தவெளி தன்னில் வெள்ளம் தேங்கி நிற்க
தயிர்கடைந்து வெண்ணெய்தனைத் திரட்டும் போது
தாழியது திடுதிப்பாய் உடைதல் போல
பயிரெல்லாம் விளைந்துபயன் அளிக்கும் வேளை
படுநாசப் பெருவெள்ளம் வந்த தய்யோ!

சிறுகதை

# வெற்றி வீரனைப்...

— நெல்லை க. பேரன் —

சுந்தரா:

சீ... என்னதான் படித்திருந்தாலும் இவ்வளவு தூரம் பின்னாலே தொடர்ந்து வந்து ''உம்மை நான் திருமணம் செய்யப்போகிறேன். நீர் சம்மதித்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி எப்படியும் நான் உம்மை அடைந்தே தீருவேன். இதற்கு நீர் என்ன சொல்கிறீர்...'' என்று தெருவழியே கரைச்சல் கொடுப்பவர்களும் இருக்கிறார்களா? கொஞ்சம் அதிசயந்தான். ஆனால் என் வாழ்க்கையிலே அப்படிக் கேட்ட ஒருவரைச் சந்தித்தேன். இப்போது அவர் என் மணாளனாகிவிட்டார். எப்படியோ நாம் இருவரும் இணைய வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

முதல் நாள நான பககத்து ஊரில் ஆசிரியைத் தொழில் பார்க்கும் டியூட்டரியொன்றிற்குச் சென்றுகொண்டிருக்கையில் சண்முகம் என்னைப் பின்தொடர்ந்து வந்தார். அவரும் அதே வழியாகத்தான் சங்கக் கடைக்குச் செல்வார். எங்களுடைய வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலேதான் வாடகைக்குக் குடியிருக்கிறார். அவர் மாத்திரமல்ல இன்னும் ஓர் ஆசிரியர், இரண்டு மாணவர்கள், ஒரு நாடகக் கலைஞர் என்று பலர் அந்த வீட்டில் குடியிருப்பது எனக்குத் தெரியும். நாடகக் கலைஞர் அடிக்கடி சன்னல் கதவுகளைத் திறந்து எங்கள் வீட்டை எட்டிப் பார்ப்பதும் இந்தக் காலத்துச் சினிமாப் பாட்டுகளுக்குச் சீழ்க்கையடிப்பதும் எனக்கு நன்றாகக் கேட்கும். நான் பார்க்கவேண்டும் என்பதற்காகவே பல வேளைகளில் அறைச் சன்னல் கதவுகளைத் திறந்துவைத்துவிட்டு நாடக வசனங்களைப் பேசி நடித்துக்கொண்டிருப்பார். ஆசிரியர் தானுண்டு தன் பாடு என்று இருந்தாலும் கல்லூரிக்குப் போகும்போதும் வரும்போதும் எங்களுடைய வீட்டை நோட்டமிடத் தவறுவதில்லை. சண்முகம்மாத்திரம் சைக்கிளில் ஒழுங்காக வேலைக்குச் சென்றுவருபவர். அவருக்கு வசாவிளானில் வேலை. அச்சுவேலியிலிருந்து நான் கால்நடையாகச் செல்லும்போது இருவரும் அடிக்கடி சந்திப்பதுண்டு. நான் பேசாமல் கண் கொடுக்காமலேயே சென்றுவிடுவேன். பக்கத்து வீட்டில் வசித்தாலும் நான் அவரைப்பற்றிக் கவலைப்பட்டதே கிடையாது. ஆனால் அன்றைக்கு அவர் அப்படி நான் உம்மைத்தான் செய்யப்போகிறேன். இது பகிடிக்கில்லைஎன்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். அன்று வீட்டில் சின்னம்மாவிடம் நடந்ததைச் சொன்னேன். அம்மா காலமாகி நாட்களாகிவிட்டன. சின்னம்மாதான் எனக்கு எல்லாம். அவவும் உடனே ''அப்பிடியோடி... ஆரடி அவன். அவ்வளவு துணிவாக ஒரு பெட்டைப் பொடிச்சியை வழிமறிச்சுக் கதைக்கவோ... கலியாணமாமேடி அவருக்கு... கலியாணம்'' என்று துள்ளிவிழுந்தா. பக்கத்து வீட்டுச் சண்முகம்தான் என்பதைத் தேன். சின்னம்மாவைத் தேடினேன். அவவும்புதினம் பார்க்க ஓடிப்போய் இருந்தா. திரும்பிவந்து மூச்சிரைக்க, ''எடியே பிள்ளை... அவன் றயிலுக்கை பாயப் போட்டானடி... ஊரெல்லாம் பிசுபிசுக்குத்டி... இதென்ன நாசங்கட்டிப் போச்சுது... எங்களுக்கு இப்படியொரு இடியேறு விழவேணுமோடி...சாகத்துணிஞ்சவனை இனி என்னடி செய்யிறது...'' என்று அங்கலாய்த்தா.

''சின்னம்மா... என்ன வந்தாலும் பரவாயில்லை- எனக்காக அவர் சாகவேண்டாம்.

தெரிந்துகொண்டதும் வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்குப்போய்விட்டா. சுந்தரா இல்லாவிட்டால் நான் உயிர் வாழமாட்டேன் என்று அவர் சொன்னாராம். ஏன் இந்த வைராக்கியம் அவருக்கு? அப்படி என்னத்தைக் கண்டுவிட்டார். ஒருவேளை என்னைக் காதலிக்கிறாரோ என்று எண்ணினேன். நல்ல காதல்தான். ஒருதலைக் காதல் கொண்டார். ஆனல்...

மறு நாள் காலை சுமார் 6 மணியளவில் சின்னம்மா இளைய மகன் பாலு ஓடிவந்து என்னிடம் ''சுந்தராக்கா... சுந்தராக்கா... அந்தச் சண்முகம் மாமா ரயிலுக்கை விழுந்து சாகப்போய் எங்கடை நாடக மாமாவும் சின்னண்ணையும் சேர்ந்து காப்பாற்றிக்கொண்டுவருகினம். அம்மா பேசிப்போட்டா என்று அவர் நல்லாகக் குடிச்சாராம்... குடிச்சுப்போட்டுச் சாகப்போய்விட்டார். பாவம் சுந்தராக்கா. சண்முகம் மாமா உன்னைத்தான் கலியாணம் [illegible] இல்லாவிட்டால் [illegible] போறாராம்.'' என்று சொன்னன்.

நான் அவரையே திருமணம் செய்துகொள்கிறேன்' என்றேன். தனக்கும் பெரிய பிரச்னையாக இருக்கிறதே என்று சின்னம்மா நினைத்தாவோ என்னவோ, சற்று நேரம் யோசித்துவிட்டுச் ''சரி பிள்ளை. அவனுடைய தாய் தகப்பனுடைய சம்மதத்தோடை செய்வம்'' என்று சொல்லிவிட்டா. எப்படியோ அந்த ஒரு கிழமைக்குள்தான் விரும்பியபடி அவர் என்னைச் சட்டப்படி மனைவியாக்கிக் கொண்டார். தாலி கட்டாவிட்டாலும் சட்டப்படி நான் இன்று அவருடைய மனைவி.

சண்முகம்

சுந்தரா... எவ்வளவு அழகான பெயர். பெயருக்கேற்பவே அவளும் அழகாக் இருந்தாள். விதம் விதமான சேலையுடுத்தி அவள் டியூட்டரிக்குப் போய்வரும் அழகே தனி அழகு. பார்த்தவுடனேயே மற்றவர்களைக் கவர்ந்துவிடக்கூடிய ஓர் இனிய சுபாவம் அவள் முகத்திலே குடிகொண்டிருந்தது எனக்கென்னமோ... அந்த வீட்டுக்குக் குடிவந்த நாள் முதல் பக்கத்துவீட்டில் புள்ளிமானைப்போல வசித்து வந்த சுந்தரா என்ற அழகு சுந்தரியை நன்றாகப் பிடித்துப்போய் விட்டது.

நாடகக் கலைஞனான நண்பனும் ஆசிரியரும்கூட அடிக்கடி அவளைப்பற்றிப் பேசுவார்கள். நடிகனே 'உனக்கெங்கே அவள் கிடைக்கப்போகிறாள். சங்கக் கடை மனேஜரான உனக்கு அந்த அழகுப் பதுமை கிடைத்துவிட்டால் அப்புறம் கிழக்கில் உதிக்கின்ற சூரியன் மேற்கிலே உதிக்க ஆரம்பித்து விடும்'' என்று கேலி பண்ணுவான். நாளாவட்டத்தில் ஆசிரியரும் சேர்ந்து அவனுடைய கேலிகளுக்குத் தூபம் போட்டு வந்தார். ஒரு நாள் கலைஞன் ஆரம்பித்தான். ''சண்முகம்... சும்மா சொல்லிக்கொண்டு அவாப்பட்டுத் திரிபவர்களைவிடச் செயலிலே காட்டுபவர்களைத்தான் எனக்குப் பிடிக்கும். எங்கே அந்தப் பெண்ணைத் தனிமையில் சந்தித்துப்பேச உன்னால் முடியுமா? எப்போதாவது கதைத்திருக்கிறாயா?'' என்று சவால்விட்டான்.

'பூ...உதென்னபிரமாதம் இ[illegible]தா... இப்பொழுதே... இன்றைக்கே கதைத்துவிட்டு வருகிறேன். கலியாணம் செய்கிறாயா இல்லையா என்று கேட்டுவிட்டு வருகிறேன் என்று கூறினேன்.

ஆசிரியர் சிரித்தார். ''அடேய் முட்டாள். கலியாணத்தைப்பற்றிக் கன்னிப் பெண்ணிடம் அதுவும் முன்னே பின்னே கதையாதவளிடம் நேரிலே பேசப்போகிறாயா? முதுகு வீங்கிப் போச்சுதா? இல்லை கன்னந்தான் கேட்குதா?'' என்று கிண்டல் பண்ணினார்.

''இல்லைமாஸ்டர். கலியாணம் செய்யப்போவது நான். பெண்ணே அவள். அப்புறம் அவளைக் கேட்காமல் வேறு யாரைக் கேட்பது என்று சொல்லிவிட்டு அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்படியாகவே சைக்கிள் பெடலைப் பலமாக உழக்கினேன்.

தூரத்தில் அவள் போய்க்கொண்டிருந்தாள். அவள் நடையிலேதான் எத்தனை அழகு. நான் பின்னாலே சென்று கேட்கிறேன். நண்பர்களிடம் சொல்லி வைத்ததுபோன்றே கேடகிறேன். சடக்கென்று மின்வெட்டு வேகத்தில் திரும்பி அருவருப்பாக ஒரு சுழிப்பு. ''சே! நீங்களும் ஒரு மனிதரா... பெண்களிடம் எப்படிப் பழகுவது என்றே தெரியவில்லை'' என்றல்லவா கேட்டு விட்டாள். பரவாயில்லை. இவளை எப்படியும் அடைந்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டேன்.

அன்று முழுவதும் முகம் வாடிப்போய் இருந்தேன். ஆசிரியரையும் நண்பனையும் பார்க்கவே வெட்கமாக இருந்தது. என்னுடைய ஆண்மைக்கே இழுக்குப் போலத் தோன்றியது. கல்லூரியில் படிக்கும் போது நல்ல அழகன் என்று ஆசிரியர்களும் இதர மாணவர்களும் பாராட்டுகின்ற என்னை — அதுவும் ஒழுங்காக வேலைக்குச் சென்று சம்பாதிக்கும் ஒருவனை அவள் அவமதித்துவிட்டாளே.. கன்னத்திலடித்ததுபோலப் பேசி அனுப்பிவிட்டாளே. என்று குமைந்தேன். கவலை. ஒரே கவலையான எண்ணங்களே திரும்பத் திரும்ப ஏற்பட்டன. அச்சுவேலியில் இருக்கும் கள்ளுக் கொட்டிலொன்றை நோக்கி என்கால்கள் தானாக நகர்ந்தன. ஒருநாளுமில்லாத பழக்கத்தைக் கவலை அன்று ஏற்படுத்திவிட்டது. குடித்தேன். நிறைவெறி ஏறும்வரைக்கும் கண்கடை தெரியாமல் விட்டேன். யாழ்ப்பாணம் போகும் பஸ்ஸில் ஏறி ஒரு மூலையில் குந்திவிட்டேன். ஏதோ நினைவாக ஆரியகுளம் சந்தியில் இறங்கிப் பட்டணத்தின் பெருவீதியில் நேராக நடக்க ஆரம்பித்தேன். என் நடையிலே தள்ளாட்டம்.

என்றாலும் வருவோர் போவோரை அவதானிக்கும் சக்தியை இழந்துவிடவில்லை. தூரத்தில சிவப்பு விளக்கு எரிந்தது. ரயில்வே கடவை என்பது சொல்லாமலே புரிந்தது

அப்பொழுது இரவு சரியாக 9-45 மணியிருக்கும். கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு வந்துகொண்டிருந்த கடுகதிப் புகையிரதத்தின் தட தட சத்தம் கர்ண கடூரமாய் ஒலித்தது. புகையிரத ஒலிக்கும் எனது சோகத்திற்கும் என்ன சம்பந்தம் இருந்ததோ தெரியாது. நான் திடீரென்று பாய்ந்து முன்னால் ஓடுகிறேன். கைகளை நீட்டிக் கொண்டே தண்டவாளத்தில் கால்களை வைத்துவிட்டேன். புகையிரதம் இதோ வந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு விநாடிக்குள் நான் அரைக்கப்பட்ட சம்பலாகி விடுவேன்.

ஆனல்...

என்ன ஆச்சரியம்! புகையிரதம் என்னைக்கடந்துவிட்டது. நானே சாகாமல் மரமாக நின்றேன். வலிமையான இரண்டுசோடிக் கரங்கள் என்னைச் சாகவிடாமல் இழுத்துப்பிடித்துக்காப்பாற்றியிருக்கின்றன. யாழ்ப்பாணத்திற்குப் படம்பார்க்கவென்று காரில் வந்த என் கலைஞர் நண்பனும் சுந்தராவின் ஒன்றுவிட்ட சகோதரனுமே அவர்கள். வந்த காரிலேயே என்னைக்கூட்டிச் சென்றார்கள். ஊர் முழுவதும் இரவேகதைபரவி விடிந்ததும் களைகட்ட ஆரம்

(4-ம் பக்கம் பார்க்க)

## நன்மை அழகு உண்மையினை வருணிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தவெளி தன்னில் வெள்ளம் தேங்கி நிற்க
தயிர்கடைந்து வெண்ணெய்தனைத் திரட்டும் போது
தாழியது திடுதிப்பாய் உடைதல் போல
பயிரெல்லாம் விளைந்துபயன் அளிக்கும் வேளை
படுநாசப் பெருவெள்ளம் வந்த தய்யோ!

அல்லலுறு மக்கள்படும் அவதி நீக்க
அரசாங்கம் பெருநிதியை உவந்தளித்து
நல்லதோர் விசாரணையை நடத்தி மக்கள்
நிலையறிந்து தரமுணர்ந்து துன்பம் போக்க
வல்லசிறு பணஉதவி செய்யச் சொல்லி
வட்டார விதானையெனும் தலைவர் கையில்
சொல்லொணுத் துயர்துடைக்கும் பணியைத்தந்தார்
செவ்வனே பணிதன்னைச் செய்வார் என்றே

அகதிகளுக் கெனக்கொடுத்த அரிசி மாவில்
அரைவாசி அகதிகுடல் சேர வில்லை
சகதிதனில் கிடந்துழலும் எருமை போன்ற
சதிசெய்வோர் பணப்பெட்டி நிறையச் செய்ய
தகுதியெதும் இல்லாத ஓட்டல்காரர்
தேடாது இருந்திடவும் நாடிச் சென்று
''மிகுதிவிலை தேவையிலைச் சரக்கை ஏற்று
மதிப்புக்குத் தக்கபடி காசைத் தாரீர்''

இவ்வாறு பேரத்தில் பணத்தைப் பெற்று
இறுமாப்பாய் இருந்திட்ட போது மேலும்
ஒவ்வாத வழிதனிலே செல்வம் சேர்க்க
ஒருதிட்டம் மிகவாய்ப்பாய்க் கிடைத்த தந்தோ
சவ்வாதுப் பொட்டிட்டுச் சாந்து மிட்டுச்
சல்லாபம் செய்துடலை விற்கும் மாது
கவ்வியே இரைதன்னைப் பிடித்தல்போல
கனதனவான் எனும்விதானை வாய்ப்பைப்பெற்ருர்

### வேறு

வீடிழந்து மாடிழந்து விளைந்தபொருள் மிக அழிந்து
பீடிழந்து பிறர்தயவில் வாழுகின்ற நிலையடைந்து
வாடிமிக உளம்நொந்த மக்களது வாழ்க்கைதனை
வளமாக்கும் நோக்கமுடன் அழிவுக்கான நட்ட
ஈடாகப் பணம்கொடுக்க இலவசமாய்க் கிடைத்தநிதி
இழிந்தநிலை தனையடைந்த ஏழைகளுக் குதவவில்லை
பாடெதுவும் தெரியாத படுபாவி பொறுப்பேற்ருேன்
பணப்பைதான் வீங்கியது பராரிகளுக் குதவவில்லை.

### வேறு

ஊராரின் உரையாடல் தனைக்கேட்டுப் பொன்னன்
ஓடோடி விதானையிடம் சென்றுரைத்தான் நட்டம்
சீரான தன்வாழ்வு திரும்பிவரும் என்று
சிந்தைமிக மகிழ்ந்திருக்க, விதானை தான் சொல்வார்
''நேராக நட்டத்தைப் பார்த்த-பிறகே தான்
நிதிதன்னை நின்னிடம் தர ஒப்ப முடியும்
''ஆராக இருந்தாலும் எனதழிவைப் பார்த்து
அதற்குரிய நட்டத்தைத் தந்திட்டால் போதும்''

வெள்ளக்கா டாயிருந்த தோட்டத்தைப் பார்த்து
வீடிழந்த பொன்னனவன் வினயமாய்ச் சொன்னுன்
''கள்ளப்பொய் சொல்லிநான் நிதி கேட்கவில்லை
குடியிருக்க ஒரு குடிசை தனைக்கட்ட வேணும்
உள்ளத்து வேதனையை விரட்டிடவே ஐயா
உவந்தொரு ஐந்நூறு கொடுத்திட்டால் போதும்
தள்ளாதே என்னுரையைத் தயவுடன் கேட்டு
தயாபரனே குடிசைகட்டப்பணம்தாரும்'' என்றுன்.

''சரிஇதிலே கையெழுத்துப் போட்டுவிடு இப்போ
சடுதியிலே பெரியதுரைக் கிதனைநான் அனுப்பி
உரியதொகை தனைப்பெற்றுத்தந்திடவே முனைவேன்''
உளறியுடன் விதானையவர் கடுதாசி தன்னில்
பிரியமுடன் பொன்னனது கையெழுத்தைப் பெற்று
பக்குவமாய்த் தன்பையில் திணித்துவிட்டார் நன்கு
நரிக்குணத்தை அறிவாஞே நல்லிதயங் கொண்டோன்
நாலுநாள் கழித்துமே வருவதாய்ச் சொன்னுன்.

துன்பமெனும் பாலைதனில் இன்பமழை பெய்ய
துடியிடையாள் தன்மனைவி மனம்மகிழ்ச்சி யடைய

சென்றுவிடுவேன். பக்கத்து வீட்டில் வசித்தாலும் நான் அவரைப்பற்றிக் கவலைப்பட்டதே கிடையாது. ஆனுல் அன்றைக்கு அவர் அப்படி என்னைத் திருமணம் செய்து கொள்ளப்போவதாகக் கூறியபோது எனக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. செருப்பைக் கழற்றி அடிக்காத குறையொன்றுதான், மற்றும்படி ''சீ...நீங்களும் ஒரு மனிதரா? தெருவில் போகிற பெண்களிடம் இப்படித்தான் பேசுவதா?'' என்று மனதாரக் கேட்டுவிட்டேன். அதற்குஅவர் இல்லை... இல்லை... நீர் இருந்துபாரும்.

பாவம் சுந்தராக்கா. சன் முகம் மாமா உன்னைத்தான் கலியாணம் கட்டுவாராம். இல்லாவிட்டால் செத்துப் போ[...]ராம்.'' என்று சொன்னுன்.

எனக்கு நெஞ்சு பகீரென்றது. ஐயோ! இது என்ன சோதனை; எனக்காக அவர் சாகத் துணிந்துவிட்டாரா? ஏன் இப்படி வன்மம்கொண்டார்? நான் மறுத்துவிட்டேன் என்று மனமுடைந்துவிட்டாரா? முடியாது, வேண்டாம். எனக்காக ஒரு இளைஞரின் உயிர் பலியாகக் கூடாது. நான் அப்பொழுதே ஒரு முடிவுக்கு வந்

''அன்புமிக உடையவராம் எங்களூர் விதானை
அவலநிலை போக்கிடவே ஐந்நூறு ரூபா
இன்னுமொரு சிலநாளில் வருமென்று சொன்னுர்''
இவ்வாறு பொன்னனும் மனைவியிடம் கூற
மின்னுவதைக் கண்டவுடன் மழைவருமென்றெண்ணும்
மன்னுலகைக் காக்குமுயர் உழவர்போல் நின்ருள்.

கோவையிதழ்த் துணைவியுடன் குலவிளக்காம் மக்கள்
குதூகலமாய் வாழ்ந்திடவே மனையொன்றைக்கட்டும்
தேவைதனைப் பூர்த்தி செய்யும் எண்ணந்தான் உந்த
தீவிரமாய் நடைபோட்டே விதானைவீட டைந்தான்
பாவையிது நான் ஆட்டி வைத்தபடி ஆடும்
பல்லிளித்துப் பாரோரை ஏய்த்திடலாம் என்றே
நாவதனுல் நஞ்சுமிழும் விதானையெனும் பாம்பு
நல்லோனும் பொன்னனையே கண்டவுடன் 'வாவா'

என்றழைத்தே இதமாக இயம்பிடுமே மேலும்
எல்லோர்க்கும் தானிந்த வெள்ளத்தால் நட்டம்
குன்று குன்ருய்க் கோரிக்கை குவிந்துவிட்ட தாலே
கொடுக்கின்ற பணத்தொகையை குறைத்து விட்டாரன்ருே
நன்றல்ல இதுவெனவே நானெடுத்தே உரைத்தும்
நாய்போலச் சீறுகிருர் கச்சேரித் துரையும்
ஒன்றுமே இலையென்ற நிலைதனிலும் பார்க்க
ஏதேனும் கிடைத்திடுதல் நன்மையே யன்ருே

இவ்வாறே இதயத்தால் பொய்யுரைத்துக் கையில்
எடுத்திட்டார் கடுதாசி ஒன்றினையே விரைந்து
ஒவ்வாத உரைகேட்டுப் பொன்னனவ னுள்ளம்
உடைந்ததே எண்ணமெலாம் மண்ணுன தென்றே
எவ்வாது செய்தாலும் இரங்கிடார் விதானை
இதையேனும் கொடுத்திட இசைந்திட்டார் நன்று
கவ்வியே பிடித்திட்டான் கரவில்லாப் பொன்னன்
கரந்தனில் திகழ்ந்ததே ஐபத்து ரூபா.

நன்றியென்று பொன்னனவன் நடந்திடும்போது
நாலுபேர் விதானை வீட்டில் குழிவெட்டக் கண்டு
மன்ருடும் தோரணையில் விதானையைக் கேட்டான்
''மாதுரையே இக்குழியேன் மனைகட்டத்தானே?''
வென்றவனுக்கிருக்கின்ற விருப்புத் தோன்ற
''வீணனே உனக்கேண்டா அதைப்பற்றிக் கேள்வி
சென்றுவா'' எனக்கூறி விதானையவர் சென்று
சீர்மனை யெழப்போகும் அடித்தளம் பார்த்தார்.

தலைதொங்கஏழைபொன்னன்அவ்விடம்விட்டகன்ருன்
தடுக்கவே இறுமாப்பால் பூரித்து நின்ருன்
கலைதன்னை விலைகூறிக் கடைச்சரக் காக்கும்
கண்ணியமே இல்லாத கயவர்களைப் போல
விலைபோட்டு நேர்மைநெறி நீதியெலாம் விற்ருன்
வீம்பதனுல் கூம்பிநின்ற உளம் கொண்டவிதானை
அலைத்திட்டான் ஏழைகளை அவர்பணத்தால்வீட்டுக்(கு)
அடித்தளம் போட்டுவிட்டான் அயலவர்கள்மெச்ச.

—அறவாழி

# நன்மை அழகு உண்மையினை வருணிக்கும் பாடல்களே பாராட்டப்பட வேண்டும்

### செய்யுள் திறனாய்வு

உளநூலார் மக்கள் பல்வேறு நாட்டங்கள் உடையவராவர் என்பர். நாட்டங்களுள் எவை சிறந்தவை எனத் தீர்த்தல் வேண்டும். நாட்டங்கள் ஒன்று ஒன்றுடன் முரண்படாமல் ஒழுங்கு செய்வோனின் வாழ்க்கையே சீரும்சிறப்பும் உடையதாகும். மக்களுடைய வாழ்க்கையில்சீர்மையுடையனவாகத் துலங்கும் இலட்சியங்களை வருணிக்கும் பாடல்களே சிறந்த கருத்துடையவை என உயர்ந்தோரால் பாராட்டப்படும். சிறப்புடைய இலட்சியத்தைக் கொண்டு ஒழுகும் குறுகிய காலவாழ்க்கை சிறப்பற்ற நீண்டகாலவாழ்க்கையிலும் பார்க்கப் போற்றப்படும் என்ருர் பென் யோன்சன் என்னும் நாடகவாசிரியர். கவி என்பது மக்களுடைய வாழ்க்கையின் திறனுய்வு என்ருர் மத்தியு ஆர்ரால்டு என்பவர். மக்களை மேனிலை அடையச்செய்யும் கருத்துக்களைச் செஞ்சொல்லால் வருணிக்கும் பாடல்களே சிறந்தவை எனக் கொள்ளப்படும். இத்தகைய பாடல்களே எமது இயல்புகளைச் சீர்மையுறச்செய்யும்.

ஆகம பண்டிதர்களிலும் பார்க்கப் புலவர்களே மெய்யின் இயல்பை மனத்தில்பதியச் செய்யும் வல்லமை உடையவர். இலட்சியங்களைச் சமயபோதகருடைய விரிந்த உரைகளிலும் பார்க்கச் செந்நாப்புலவர்களுடைய பாடல்களில் காணலாம் என உரைத்தனர் ஆங்கிலப்புலவன் செல்லி. அறவாழ்க்கையின் திறமைகளை திருவள்ளுவனுர் திருவாய் மலர்ந்தருளினுர் என அறிவோம். ஈண்டு அறவாழ்க்கையின் இயலைத் திருஞானசம்பந்தர் வருணித்தலை நோக்குவோம்.

வாழ்க அந்தணர்
வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்
வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீய
தெல்லாம் அரனுமமே
சூழ்க வையக முந்துயர்
தீர்கவே.

இப்பாடல் மேன்மக்கள் போற்றும் அறவாழ்க்கையைச் செஞ்சொல்லால் மொழியும் அந்தணரும் வானவரும் ஒழுக்கத்தால் சிறந்தவராதலின் போற்றப்படுவர். ஆனினத்தையும் தண்புனலையும் ஓம்புதல் நாகரிகவாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்; வேந்தனும் ஓங்குக என்பது செங்கோல் செலுத்தலின் சிறப்பை வற்புறுத்தும் தீயதெல்லாம் ஆழ்க என்பது மன்பதை மீதுள்ள அன்பை மிளிரச் செய்யும். அரனுமமே சூழ்க என்பது கடவுளைப் பரவுதல் வாழ்க்கையைச் சீர்மையுறச் செய்யும் என்பதை காட்டும். துயர் தீர்தல் எவ்வழி என்பதே மெய்யியலின்கண் ஆராயப்படும்.

ஓர் ஓவியத்தின் அழகு அது உணர்த்தும் கருத்தின் சிறப்பைப் பொறுத்ததாகும். நிறம் அக்கருத்தின் அழகைக் காட்டுதற்குக் கருவியாகுமொழிய ஒரு போதும் அழகாகாது. ஒரு பாவின் பொருளே பாவின் வண்ணங்களிலும் சிறப்புடையதாகும். ஒரு செய்யுளின் முக்கியமான அழகு அது இயம்பும் பொருளே என்பதைக் கடைப்பிடிக்க. கவியுரைக்கும் பொருள் சிறந்த இலட்சியம் உடையதாகவும், கவி தூண்டும் உணர்ச்சி ஆழமுடையதாகவும், கவி பயன்படுத்தும் சொற்ருெடர் இனிமைவாய்ந்த சந்தமுடையனவாகவும் இருத்தல் விரும்பப்படும்.

புலவன் ஒருவன் ஒரு செய்யுளை இயற்றும் போது அது இரசித்து நுகரப்படவேண்டுமென்னும் நோக்கம் உடையவனுக இருப்பன். சில சமயத்தில் தன் கவி இரசிக்கப்படுமோ என்பதை எண்ணுமலே புலவன் தன்மனத்தில் பதிவெய்திய ஓர் அனுபவத்தை இசைக்கக்கூடும். காதலனும் கவிஞனும் பித்தனும் உணர்ச்சிவயத்தராகிச் சுவைகளில் அளவு கடந்து ஒழுகுவராகலின் ஒப்பார் என ஆங்கிலநாடகவாசிரியர் ஷேக்ஸ்பியர் இயம்பினர். கவி தான்பாடுதலில் இன்புறுதற்காகவே தான் பாடுகிருன் என இயம்பக்கூடும். அங்ஙனம் கொள்ளப்படினும் இன்புறுதற்கு ஏதுவாக இருக்கும் நயங்களை யாம் ஆராயலாம். ஒரு செய்யுள் படிப்போனின் உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றலுடையதாயின், அச்செய்யுள் உரைக்கும் அநுபவம் புலவனுல் உணர்ச்சியுடன் நுகரப்பட்டதாதல் வேண்டும். இங்ஙனம் அறம், பொருள் இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருட்களை வருணிக்குங்காலை மெய்ப்பாடுகள் எழும்வண்ணம் புலவன் இசைப்பன். மெய்ப்பாடுகள் அழுகை, உவகை வீரம், அச்சம், நகை, வெகுளி, மருட்கை, இளிவரல் என எட்டாகும் கலித்தொகையில் உள்ள குறிஞ்சிப்பாடல் ஒன்று முடமுதிர் பார்ப்பானின் தண்ணிய நாடகம் காமவேட்கையை நகைச்சுவையுடன் வர்ணிக்கும். பிறிதொன்று தலைவியொருத்தி ஊஞ்சலாடும் போது காதலின்பயனுக ஊஞ்சலை ஊக்கும் தலைவனின் கையில் வழுவி விழுதலை வருணிக்கும் கபிலர்

**த. இராமநாதபிள்ளை**
**(பி. ஏ. லண்டன்)**

காமச்சுவையை வருணித்தலில் வல்லவர் என்பது பத்துப் பாட்டிலுள்ள குறிஞ்சிப் பாட்டாலும் தெரியும். மருதனிள நாகனுர் இயம்பிய மருதக்கலி ஒன்று, குறளன் கூனி என்போர் ஊடிக்கூடுதலை வருணித்தல் நகைச்சுவை மிக்கு விரவியதென இரசிக்கப்படும். இரங்கற்பா இசைத்தலில் நல்லந்துவனுர் ஒப்பாருமிக்காருமின்றித் துலங்கு

(4-ம் பக்கம் பார்க்க)


# தம்பி அன் கோ.,

284, K K S ரோட், வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| ரூ. 10,000/-க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் கோவிலில் துணைவன் படப்பிடிப்பு

"துணைவன்" படத்திற்காக திருச்செந்தூர் முருகன் கோவிலில் படப்பிடிப்பு நடக்கிறது.

சவுகார்ஜானகி, ஏ.வி. எம் ராஜன் ஆகியோர் படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார்கள்.

தண்டாயுதபாணி பிலிம்ஸ் சார்பில் சாண்டோ சின்னப்பா தேவர் 'துணைவன்' என்ற பெயரில் ஒரு சமூகப்படம் தயாரிக்கிறார். முருகக்கடவுளை வழிபடுவோருக்கு கேட்டது கிடைக்கும். நினைத்தது நடக்கும் என்ற கருத்தை வலியுறுத்தி இதன் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. பக்தனுக ஏ.வி. எம். ராஜன் நடிக்கிறார். ராஜனின் மனைவியாக சவுகார்ஜானகி நடிக்கிறார். கடந்த மாதம் பழனி, மருதமலை ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடந்தது.

படத்தின் இறுதிக் காட்சி திருச்செந்தூர் முருகன் சந்நிதியில் நடைபெறுவதாக படமாக்குகிறார்கள். சவுகார் ஜானகி, ஏ.வி. எம். ராஜன் ஆகியோர் அதில் கலந்துகொண்டு நடிக்கிறார்கள். எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்கிறார்.

## 'எனது திருமணம் காதல் திருமணமல்ல'

### நடிகர் ஜெய்சங்கர் கூறுகிறார்

எனது திருமணம் காதல் திருமணமல்ல. பெரியார்கள் பேசி முடிவுசெய்த திருமணம்தான் என்று ஜூன் மாதம் 18-ம் தேதி திருமணம் செய்யவிருக்கும் நடிகர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

கல்லூரி மாணவி கீதாவை நடிகர் ஜெய்சங்கர் திருமணம் செய்துகொள்ள இருப்பது தெரிந்ததே.

திருமணம்பற்றி ஜெய்சங்கர் கூறியதாவது:-

"என்பெற்றோர்கள்பார்த்து முடிவுசெய்த திருமணம் தான் இது! நான் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தது என் தாயாருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி!

எங்கள் குடும்பத்திற்கும் பெண்வீட்டாருக்கும் பதினைந்து ஆண்டுகளாகப்பழக்கம்! பெண்ணின் வீடு சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள ஜெய்ப்பூர் நகரில் உள்ளது.

அடுத்தமாதம் 18-ம்தேதியன்று காலை திருப்பதியில் வைதீகமுறைப்படி திருமணம் நடக்கும். அன்று மாலை சென்னை ஆபட்ஸ்பரி மண்டபத்தில் வரவேற்பு விழாவுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

மணப்பெண் கீதா, பொருளாதார பாடம் எடுத்து எத்திராஜ் கல்லூரியில் படித்து வருகிறாள். நானும் பொருளாதாரத்தில்தான் பி. ஏ. பட்டம் பெற்று இருக்கிறேன்.

கீதா தொடர்ந்து படிக்க வேண்டுமென்று விரும்பினால் திருமணத்திற்குப்பின்னும் தொடர்ந்து கல்லூரியில் படிக்கவைப்பேன்.

நானும்தொடர்ந்து படங்களில் நடித்துவருவேன். முடிந்தால் தேன்நிலவுக்காக காஷ்மீருக்கும் செல்வோம்.

'யோகி' தயாரித்து தரும் கலை அரங்கம்

## நடிகரை நடிகை திருமணம் செய்து கொள்ளக்கூடாது

### நடிகை பாரதி கூறுகிறார்

நடிகரை நடிகை திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று கூறினார், நடிகை பாரதி.

நடிகர் ஒருவரை மணந்து கொள்ளப்போகிறீர்களாமே! எப்போது என்று பாரதியிடம் கேட்கப்பட்டது. அந்தக் கேள்விக்கு சுடச்சுட பாரதிபதில்சொன்னார்.

"இரண்டு குற்றவாளிகள் சேர்ந்து நடத்துகிற வாழ்க்கை நன்றாக இருக்கும் என்று நினைக்கிறீர்களா? அவர்கள் சொந்த வாழ்க்கையில் எத்தனையோ தவறுகள் செய்திருப்பார்கள்! அதைச்சொல்லிக்கொள்ளத் தான் அவர்களுக்கு நேரம் இருக்கும்!

நடிகரை நடிகை மணந்து கொண்டால், அவர்களுடைய வாழ்க்கையை சினிமாவுக்குத்தான் ஒப்பிடலாம்! அவர்கள் வாழ்வு சந்தோஷமாக ஒரு வாரம் ஓடுமோ அல்லது 100 நாட்கள் ஓடுமோ அல்லது வெள்ளிவிழா கொண்டாடுமோ, அதை யார் கண்டார்கள்.

அது மட்டுமல்ல. பெரிய ஸ்டாராக ஜனங்கள் மத்தியில் மின்னலாம்! எப்படி?

தாயாகவா அல்லது உத்தமியாகவா அல்லது அவர்கள் உள்ளத்திலே உயர்ந்த தலைவியாகவா? இடையவே கிடையாது! பாட்டிலில் இருக்கிற பிராந்தி மயக்கம் கொடுப்பது போலத்தான் ரசிகர்களுக்கு மத்தியில் நடிகை இருக்கிறாள்!

பூஜை அறையில் எந்த நடிகைபடத்தையும்வைத்து இருப்பதாக நான் கேள்விப்படவில்லை! படுக்கை அறையில்தான் படங்களை மாட்டியிருக்கிறார்கள் என்று பாரதி கூறினார்!

இக்காட்சி மாடர்ன் தியேட்டர்சின் "பலே கிட்டு" படத்திற்காக படமாக்கப்பட்டது! நடிகையாக பாரதி நடித்தார்! தயாரிப்பாளர் ஆர். சுந்தரம் டைரக்ட் செய்தார். இதன் கதை, வசனத்தை ஏ. எல். நாராயணன் எழுதியுள்ளார்!

## எம். ஜி. ஆரின் தங்கையாக புஷ்பலதா நடிக்கிறார்

எம். ஜி. ஆரும், ஏ. வி. எம். ராஜனும் முதல் முதலாக ஒன்று சோந்து நடித்தார்கள்.

அவர்கள்இருவரும்நடித்த காட்சிகளை இரட்டையர்கள் கிருஷ்ணன்-பஞ்சு டைரக்ட் செய்தார்கள்.

மேகலா பிக்சர்சார் தயாரிக்கும் ஈஸ்ட்மென் கலர்ப் படம் "எங்கள் தங்கம்". இதில் எம். ஜி. ஆரும், ஜெயலலிதாவும் ஜோடியாக நடிக்கிறார்கள்.

எம். ஜி., ஆருக்கு தங்கையாக குருட்டுப்பெண் வேடமேற்று புஷ்பலதா நடிக்கிறார். ஏ. வி. எம். ராஜனை எம். ஜி. ஆர். வீட்டுக்கு அழைத்து வரும் காட்சி முதல்முதலாக படமாக்கப்பட்டது. 'டிப்டாப்' வாலிபனாக ஏ. வி. எம். ராஜன் நடித்தார்.

மாருதிராவ், அமிர்தம் ஒளிப்பதிவு செய்தார். ஏ. வி. எம். ஸ்டுடியோவில் தொடர்ந்து படப்பிடிப்பு நடக்கிறது.

## 'சிவாஜி' சடுகுடு விளையாடினார்

சடுகுடு விளையாடினார் சிவாஜிகணேசன்!

குழந்தைகளுடன் விளையாடுவது என்றால் சிவாஜி கணேசனுக்கு மிகவும் கொண்டாட்டம்.

பொடிநடிகன் பிரபாகரன் பக்கோடா காதர், சதன் மற்றும் 10 பேர்களுடன் சேர்ந்து கொண்டு சிவாஜிகணேசன் சடுகுடு விளையாடினார்.

'தங்கப்பிரம்பு எடுத்து தாலிகட்ட வாரேண்டா' வெள்ளிப் பிரம்பெடுத்து விளையாட வாரேண்டா" என்றுபாடிக்கொண்டே சடுகுடு விளையாடினார் சிவாஜி கணேசன்.

சிவாஜியின் சடுகுடு விளையாட்டை கே. ஆர். விஜயா ரசித்துப்பார்த்தார். இக்காட்சி அருண் பிரசாத் மூவிசின் படத்திற்காக ஏ. வி. எம். ஸ்ருடியோவில் படமாக்கப்பட்டது.

சுந்தரம் ஒளிப்பதிவு செய்தார். பி மாதவன் டைரக்டு செய்தார்.

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்துவிட்டது. சுந்தரா இல்லாவிட்டால் எப்படியும் சாகத்தான் செய்வேன் என்றேன். அவளுடைய சின்னம்மாவும் ஒத்துக்கொண்டாள். எனது பெற்றோருக்கும் அண்ணாவுக்கும்கூட இன்னும் விஷயம் தெரியாது. நான் 21 வயது மேஜர். சுந்தராவும் மேஜர், பொலிஸ் நிலையத்தில் சென்று பதிவுத் திருமணம் செய்துகொண்டோம். இனிமேல் நண்பர்கள் என்னைப் பரிகசிக்க முடியுமா? எனது விருப்பம் நிறைவேறிவிட்டது. சுந்தரா சட்டப்படி இப்போது என்னுடைய மனைவி.

(யாவும் கற்பனை)

## தமிழ்நாடு பொது சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா 1968ல் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட விழாவையொட்டி வானொலியில் ஆற்றிய உரையின் சாராம்சம்.

# பூப்பிளக்கவரும் புற்றீசல் போல பிள்ளைகளைப் பெருதீர்

அளவோடு பெற்று. . .

குடும்பநலத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் தாயும் சேயும் நோய்நொடியின்றி வாழவேண்டுமென்பதே. ஓர் இரு குழந்தைகளுக்குத் தந்தையாகவிருக்கும் குடுப்பத் தலைவன் குறைந்த வருமானம் இருந்தால்கூட குழந்தைகளை நல்லமுறையில் வளர்க்க முடியும். உள்ளமும் உடலும் உரம் பெற்றிருக்கச் செய்ய முடியும் ... க்க முடியாமல் இருப்பதும் தீர்க்கமுடியாத கோளாறுகளுக்குள்ளாவதும் கண்கூடாகும். எனவேதான் குடும்பநலத்திட்டம் தாய் சேய் நலத்துக்கும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

### திட்டத்தின் நோக்கம்

இன்று நல்வாழ்வு திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டபடியால் இறப்பு ... பார்த்து "நீங்கள் இவ்வளவு வளர்ந்திருக்கிறீர்களே. இங்கே குடும்பக் கட்டுப்பாடு கிடையாதா?" என்றார். 'இருக்கிறது ஐயா' என்றார் அண்ணா. எங்கள் மக்கள் தொகையையும் செல்வத்தையும் ஈடு போட்டுப்பார்த்தால் தேவை போக மீதம் வரும்: உங்கள் மக்கள் தொகையையும் கணக்குப் போட்டுப் பார்த்தால் உங்களுக்கு என்ன வரும்' என்று கேட்டார். அண்ணா வேடிக்கை ... அடிப்படையான திட்டமாக இருக்கிறது. எனவே நாட்டுநலம் கோரும் எல்லோரும் குடும்பநல திட்ட வெற்றியில் ஈடுபட்டாக வேண்டும்.

குடும்பம் அளவாகத்தான் இ[illegible]கவேண்டும் என்பதற்கும், வரம்பு ஏற்படுத்திக் கொள்ள வழிகளை வகுத்துக்கொள்ள வேண்டுமென் பதற்கும் பட்டினத்தார் முதல் பாவேந்தர் பாரதி தா[illegible]ர்வரை ஆதரவு தெரி ...

யிர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத்தோல் மரத்துக்
குட்கால் நுழைத்துக்
கொண்டே
ஆப்பதனைப்பிடித்தசைத்த
குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல
அகப்பட்[illegible]ர"

என்று பட்டினத்தடிகள் பாடியுள்ளார்.

### ஆதரவு வேண்டும்

பாரதிதாசன் அளவுக்கு மீறிய குடும்பம் ... லைகளைக் காத்தாள்"

அதே பாடலில் பாரதிதாசன் மனவலிமையால் மட்டும் பிள்ளைப்பேற்றைத் தவிர்த்துவிட முடியாதென்பதையும் விளக்கியுள்ளார். காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம். இதிலென்ன குற்றம்?" என்று வினு விடுத்துள்ளார்.

தமிழகஅரசு குடும்பநலத் திட்டமுறைகளை மக்களுக்கு எடுத்து விளக்கவும் கருத்தடை சாதனங்களை வழங்கவும் 1213 நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. 200க்கு மேற்பட்ட பெண் டாக்டர்கள் இதற்காகப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறார்கள். குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது.

## நன்மை அழகு உண்மை....

(3ம்பக்கத் தொடர்ச்சி)

வர். அவலச் சுவையினைச் சிலப்பதிகாரம் என்னும் துன்பவியல் நாடகக் காப்பியத்தின்கண் இளங்கோவடிகள் கன்னெஞ்சும் உருக வருணித்தலைக் காண்க.

காதற் கெடுத்த நோயொ
டுளங்கனன்
றூதுலைக் குருகின் உயிர்த்
தனளுயிர்த்து
மறுகிடை மறுகுங்
கவலையிற் கவலும்
இயங்கலு மியங்கும் மயங்
கலு மயங்கும்
ஆர ஞுருற்ற வீரபத்தினி.

ஆனை யாஉனக் கமைந்
தன மாருத மறைந்த
பூனை யாயின கண்டனை
இன்று போய்ப்போர்க்கு
நாளை வாவென நல்கி
னன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசலை
நாடுடை வள்ளல்

என்னும் விருத்தம் வீரச் சுவையை வருணித்தலைக் காண்க.

இக்காலத்தில் பேசும் படம், சிறுகதை முதலியவை இணைவிழைச்சு முதலிய கீழ்த்தரமான கருத்துக்களை வருணித்துக் காட்டுதலால் பொதுமக்கள் அவற்றினைச் சிறந்த நோக்கங்கள் என எண்ணுகின்றனர். அவற்றினைச் சுவைத்தல் தம் பண்பாட்டிற்கு ... களும் வினைகளும் உலகியலை உள்ளத்தை உள்ளவாறே வருணித்தல், நாடகத்துக்குச் சிறப்பாகுமென்பதில் ஐயமில்லை. எனினும் இலட்சியங்களைப் போற்றும் தலைவன் தலைவியரை நாடகபாத்திரங்களாக அமைத்து அவர்களின் உரையாலும் வினையாலும் நாடகம் பார்ப்போரின் மனக்கோட்டம் நீங்க அவர்தம் உள்ளத்தை உயர்வடையச் செய் வதே நாடகவாசிரியனின் நோக்கமாகும். அறத்தின் சிறப்பையும் மறத்தின் இழிவையும் மெய்ப்பாட்டுணர்ச்சி எழும் வண்ணம் வருணித்தலே புலமையின்பாற்படும். இராமாயணமும் சிலப்பதிகாரமும் இத்தகைய சிறப்பினை உடைமையால் உயர்ந்தோர் போற்றும் இலக்கியங்களாகும்.

கவியியற்றில் இன்புறுதற்காக கவி இயற்றும் புலவன் தன்னை நாட்டி இன்புறுகின்றான். மக்கள் தம்மை நாட்டும் உரிமை உடையோராயினும்' எவ்வகையில் தம்மை நாட்டல் நாகரிக வாழ்க்கையின் இலட்சியமாகுமென ஆராய்ந்தறிதல் அவசியமாகும். இலட்சியங்களை எடுத்துக்காட்டுதலில் திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள் போன்ற பெரும்புலவர்கள் கண்ணுங் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த வருமானம் இருந் தால்கூட குழந்தைகளை நல்லமுறையில் வளர்க்க முடியும். உள்ளமும் உடலும் உரம் பெற்றிருக்கச் செய்ய முடியும். ஒரு தாய் தன் வாழ்நாளில் இரண்டு அல்லது மூன்று பிள்ளைகளைப் பெற்றுவளர்க்க உடல்நிலை இடம் கொடுக்கிறது. ஒரு குழந்தை பெறும் தாய் உடம்புதேறி மற்றொரு மகவுக்குத் தாயாகக் குறைந்தது 3 ஆண்டுகள் இடைவெளி வேண்டும். இது போன்றுபிறக்கும்பிள்ளைகள் கூடுதலானவலிவோடு இருக்கும். ஆண்டுக்கொன்ருகப் பிறக்கும் பிள்ளைகளும் நட

### நோக்கம்

இன்று நல்வாழ்வு திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டபடியால் இறப்பு விகிதம் குறைந்துள்ளது. சராசரி வயது 52ஆக உயர்ந்துள்ளது. உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது எனினும் தனி மனிதனுக்குக் கிடைக்கும் உணவு அளவு குறைந்திருக்கின்றது. என்ன காரணம் என்பதை அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்ட ஒரு சிறு நிகழ்ச்சியின்மூலம் விளக்குகின்ருர். அமெரிக்காவிலிருந்து வந்த நண்பர் ஒருவர் அறிஞர் அண்ணுவைப் ...கள் மக்கள் தொகையையும் கணக்குப் போட்டுப் பார்த்தால் உங்களுக்கு என்ன வரும்' என்று கேட்டார். அண்ணு வேடிக்கையாகப் பதில் சொன்னபின்னர் அந்த அமெரிக்க நண்பர் 'இந்த மக்கள் தொகைக் குறைப்பில் நீங்கள் வெற்றி பெருதவரையில் எத்தனை திட்டங்கள் போட்டாலும் இந்தநாடு பொருளாதாரத் துறையில் வெற்றிபெற முடியாது'' என்ருர்.

இதை நாம் மனதில் கொள்ளவேண்டும். குடும்ப நலத் திட்டம் நம் பொருளாதாரத் திட்டத்திற்கு

...கொள்ள வழிகளை வகுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கும் பட்டினத்தார் முதல் பாவேந்தர் பாரதிதா...வரை ஆதரவு தெரிவி...ருக்கிருர்கள்.

'பூப்பிளக்க வருகின்ற
புற்றீசல் போலப்
புலபுலனக் கலகலனப்
புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறி
...பாடியுள்ளார்.

### ஆதரவு வேண்டும்

பாரதிதாசன் அள...க்கு மீறிய குடும்பம் ...வல நிலையை அடைந்த தென்பதை விளக்கு வதைப் பாருங்கள்.

பெண்குழந்தை பிறந்ததினி
ஆண்குழந்தையொன்று
பிறக்குமா என்றிருந்தேன்

அவ்வாறே பெற்ருள்
கன்ன அழகும் மு...அழகும்
கண்டு நாட்கள்
கழிக்கையிலே மற்ருென்
றும் பின் ஒன்றும்
பெற்ருள்
என்னுமொரு நா... வரை
யுப் எண்ணி உழைத்
திட்டேன்
எழில்மனைவி தன்னுடலில்
முக்காலும் தேய்ந்தாள்
உண்ணுவதை நாலு...
மனம் வருவதில்லை
உண்ணுமலே மனைவி பிள்

...கள் இதற்காகப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிருர்கள். குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது. தொடர்ந்தும் குடும்பநலத் திட்டத்திற்கு ஆதரவு தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

# இக்காலப் பெண்களால் புரிய முடியாததேன்?

மகளிர் தங்கள்கணவன்மாருக்கு உணவளிக்கும் போது அவர்களுக்குத்தாங்களே சமைத்து உணவு பரிமாறவேண்டும். இப்படிச் செய்தலே கற்புள்ள மங்கையர்க்கழகு. இந்த முறைதான் பண்டைக் காலம் தொட்டு நடைபெற்று வந்தது. ஆனுல் இன்று இந்த பண்டைய பண்பானமுறை மிக அருகிவருகிறதென்றே கூறலாம். இப்பொழுது கணவன் அருகில் மனைவி சமமாக உணவருந்த சமையல்காரன் உணவு பரிமாறுகிருன். அதனுல்தான் பண்டைக்காலப் பெண்கள் உலகில் சாதித்தவைகளை இக்காலப் பெண்மணிகள் சாதிக்கமுடியாதவர்களாக இருக்கிருர்கள்.

தம் கையால் சமைத்து தம் கணவருக்கு தங்கள் கையாலே உணவு பரிமாறும் பெண்களே கற்புடைய பெண்கள். தங்கள்பிறந்தகங்களின் சிறப்புக்கள்பற்றி புகுந்தவீட்டில் போற்றிக் கூறுபவர்கள் கற்புடைய பெண்களல்ல. அவ்வாறு கூறுவது பெண்களுக்குஅழகுமல்ல.

கயப்பாக்கம்
சைவசித்தாந்த வித்தகர்
சோமசுந்தரம் செட்டியார்

பண்டைக் காலத்தில் கற்புடைமகளிர் தாம்நினைத்ததையெல்லாம் சாதித்தார்கள். உதாரணமாக திருமுனைப்பாண்டிநாட்டிலே திலகவதியார் தமக்குத் திருமணம் பேசிய கணவன்

## சாதனைகள்

போரிலே மாண்டுவிட்டான் எனக் கேள்வியுற்றதும் இருவருக்கும் திருமணம்செய்து வைக்கப்படாதிருந்த பொழுதும் அவர்தான் விதவை என நினைத்துப் பின்னர் விவாகம்செய்யாது இருந்து பல திருத்தொண்டுகளைச் செய்தார். இத்திலகவதியார் தனது தம்பியாகிய திருநாவுக்கரசரின் சூலைநோயை இறைவனருள் பெற்று நீக்கினுர். இது கற்புள்ள பெண்களுக்கு எடுத்துக்காட்டாகவிருக்கின்றதல்லவா?

திலகவதியார் மட்டுமன்றி காரைக்காலம்மையார் மங்கையர்க்கரசியார், இசைஞானியார் போன்ற பண்டைக்காலப் பெண்கள் பலர் உலகம் போற்றுமளவுக்கு கற்பிற்சிறந்தவர்களாக வாழ்ந்து பல செயற்கரிய செயல்களைச் செய்தனர். சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த பெரியபுராணம் இத்தகைய மகளிர் பலரின் சரித்திரத்தைக் கூறுகிறது.


### பெண்கள் அழகுசெய்யலாமா?

மங்கையர் தமது கணவரோடு இருக்கும்பொழுது தங்களை அழகுசெய்யவேண்டும். கணவன் இல்லாத பெண்கள் தங்களை அழகு செய்வார்களானுல் அது அவர்களின் கற்புக்குப் பங்கம்விளைவிப்பதாக அமையும்.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிள்வுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.
போன்: 330



தயாரிப்பு
குணம்

மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள். .
இன்றே விஜயஞ்செய்யுங்கள்

தெய்வா நகை மாளிகை
(முட்டாஸ்கடைச் சந்திக்கு அருகாமை)
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

# தம்பிக்கும் கேட்கும் 'பாஷன்'

இது இளவேனிற்காலமல்லவா? ஒரே புழுக்கம். எனது கூடு சிறிது. அதற்குள் குஞ்சுகளை நிம்மதியாகத் தூங்கவிட்டுவிட்டு காற்று வாங்க ஒரு மாமரத்தை நாடி அதன் அடர்ந்த கிளையொன்றில் உட்கார்ந்தேன்.

அங்குதான் நிம்மதிகிடைத்ததா? இல்லை மாமரஅடியில் எனக்கு முன்னே சென்று தரகர் மாமாவும் அவரிடம் அகப்பட்டுக் கொண்ட ஓர் அப்பாவிமனிதரும் ஏதோ காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். விஷயம் என்னவென்று நினைக்கிறீர்கள் கல்யாணவிஷயந்தான்.

'மாப்பிள்ளையின் தங்கைக்கும், தந்தைக்கும் இனும் கொடுக்க உடன்பட்டுவிட்டார்கள். இனி அவரின் தம்பிக்கும் அவர்கள் கேட்கிற தொகையைக் கொடுத்துவிட்டால் விஷயம் பூர்த்தியாகிவிடும். ஏன் ஐயா தயங்குகிறீர்கள்?' என்ருர் தரகர் மாமா. அவ்வளவுதான். அப்பாவி பெண்ணைப் பெற்ற அந்த அப்பாவுக்குக் கோபம் குமுறிக்கொண்டு வந்துவிட்டது. என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டாய். பையனின் குடும்பத்தினர் எனக்குப் பணந்தந்து வைத்தார்களா? தந்தைக்கு, தங்கைக்கு, தம்பிக்கு இன்னும் கொஞ்சகாலம் போக அவர்கள் வீட்டில் நிற்கும் வேலைக்காரனுக்கும் இனும் கேட்பார்கள் தனது குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் முதலில் இப்படிப் பிச்சையெடுக்கும் பிள்ளையாண்டான்தான் ஏற்றுக்கொள்ளும் பெண்ணை எவ்வாறு காப்பாற்றுவான். பெரிய உத்தியோகத்தில் இருக்கிருன் என நினைத்து இவனுக்கு என் பெண்ணைக் கொடுப்பதிலும் பார்க்க இதைப்பொருளோடுகுறைந்த உத்தியோகத்திலுள்ள கடும் உழைப்பாளி ஒருவனுக்குக் கொடுத்தால் அவன் பொருளையும், பெண்ணையும் பாதுகாப்பான் என ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டார்.

பாவம் தரகர் மாமா என்ன செய்வார் சீதனம் கேட்கும்போது மாப்பிள்ளையின் தம்பிக்கும் இனும்கேட்கும் 'பாஷன்' ஒன்று கல்யாண வட்டாரத்தில் உத்தியோககாரப்பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்ருேர்களால் சமீபத்தில் வெளியிட்டனுப்பப்பட்ட சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது உங்களுக்குத் தெரியாதுபோல. இவ்வாறு நீங்கள் கல்யாணவட்டார சுற்றறிக்கைகளை அடிக்கடி பார்க்காதிருந்தீர்களானுல் எப்படி உங்கள் ஏழு பெண்களையும் கரைசேர்க்கப் போகிறீர்கள் என்று கூறிவிட்டு விரைவாகநடையைக் கட்டினுர். இவற்றைக் கேட்ட அந்த அப்பாவித் தந்தை தம்பிக்கும் கேட்கும் 'பாஷன்' என முணுமுணுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டகன்ருர்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நானும் பண ஆசைபிடித்த சில மனிதரின் கையாலாகாத் தனத்தை நினைத்துக் கொண்டு எனது கூடு நோக்கிப் பறந்தேன்.

— குடும்பச்சிட்டு

...அவற்றினைச் சிறந்த நோக்கங்கள் என எண்ணுகின்றனர். அவற்றினைச் சுவைத்தல் தம் பண்பாட்டிற்கு அறிகுறியாகுமென எண்ணுவர். ஆகலின் திறனுய்வோர் திறமையின் தரங்கள் யாவையெனத் தீர்த்தல் அவசியமாகும். நன்மை, அழகு, உண்மை என்பவற்றை வருணிக்கும் பாடல்களே புலமையுடையவை எனப் பாராட்டப்படுதல் நன்று. அறம், பொருள், இன்பங்களின் நன்மையையேனும், அழகையேனும் உண்மையையேனும் சிறப்பித்துப் பாடுதல் நன்று. கல்வியறிவாலும் ஒழுக்கத்தாலும் பண்பாடுஉடையோராகும். சான்ருேர் சுவைக்கும் செய்யுட்களே சிறந்தவையாகக்கொள்ளப்பட வேண்டும். , கவி இன்புறுவித்தலும் படிப்பினையைத் தருதலும் செய்யுமாயினும், கவிநயம் இவ்விரு கருமத்தையும் மாத்திரம் பொறுத்தது அன்று. வேறு நயங்களையும் உடையதாகும். அச்சம் இரக்கம் என்பவற்றைத் தூண்டுதல் மூலம் மனக்கோட்டத்தை நீக்கி மனத்தைச் சுத்தி பண்ணுதலே துன்பவியல் நாடகத்தின் நோக்கமாகும் என்பர் அரித்தாத்தில். நாடகபாத்திரங்களின்உரை...

...யங்களை எடுத்துக்காட்டுதலில் திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள் போன்ற பெரும்புலவர்கள் கண்ணுங் கருத்துமாயிருப்பர் என்பது அங்கைநெல்லிக்கனிபோலத் தெளிவாகும். கவியியற்றில் இன்புறுதற்காகவே கவி இயற்றப்படும்என்பது வெற்றுரையாகும். அத்தகைய பயிற்சியால் மக்களின் மனம் திருத்தமுறுமோ? மனமாசு நீங்குமோ? மக்களின் வாழ்க்கை நோக்கம் உயர்வடையுமோ? மக்களின் பண்பாடு துலங்குமோ? மக்களின் விலங்குத்தன்மை மாற்றமடைந்து தெய்வத் தன்மையாகுமோ? இசையின்பத்தைச் சுவைத்தல் வீடடைதற்குத் துணையாகும் என்பது ஒரு போலிக் கொள்கை. இசையில் இன்புறுவோர் கந்தருவவுலகுக்குச் செல்வாரொழியச் சிவலோகம் சேரமாட்டார். தம்மை நாட்டி இன்புறுதல் என்பது சிறந்த இலட்சியத்தைத் தெரிந்தெடுத்து தம்மை நாட்டுதலே என்பதைக் கடைப்பிடிக்க இயற்கைப் பொருளையேனும் மனிதவியற்கையையேனும் வருணிக்குங்காலை அவற்றில் அழகுள்ள ஒரு புதிய கருத்தைக்கூறுதல்ல புலமையின் சிறப்பென்பர். ஆங்கிலப் புலவன் கொலறிச்சு. இயற்கையில் உள்ளதை உள்ளவாறே வருணிக்கும் போது புலமைக்கு இன்றியமையாத கற்பனையாற்றல் துலங்காது. உள்ளதை உள்ளவாறே சொல்லுதல்பொதுவறிவைச்சொல்லுதலாகும். இயற்கையை ஆராய்ந்து சொல்லுதல் விஞ்ஞானமொழியக் கவின்கலையாகாது. இலட்சியத்தை விளக்கும் நோக்கத்தோடேயே சிறந்த இலக்கியங்கள் இயம்பப்பட்டன.

'ஆசைபற்றி அறையலுற்
றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன்
கதையரோ.'

அறவாழ்க்கையில் வெற்றி பெறுதலையே இராமன் தன் வாழ்க்கை நோக்கமாகக் கொண்டனன். அவ்வெற்றியே காசில் கொற்றமாகும்.

அரசியல் பிழைத்தோர்க்கு
அறங் கூற்றமாவதும்
உரைசால் பத்தினிக்
குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்
தூட்டு மென்பதும்

இளங்கோவடிகளின் கொள்கையாகும். இராமாயணம் சிலப்பதிகாரம் என்னும் இருகாவியங்களும் முறையே அறக்கற்பையும் மறக் கற்பையும் வருணித்து மக்களின் உள்ளத்தையும்உணர்ச்சியையும் உயர்வடையச் செய்தலை அறிவேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தீஸ்வர வித்தியாலய விளையாட்டுப்போட்டி

ஆரம்ப மாணவர் இல்லப்போட்டி 5-6-69
கல்லூரி மாணவர் இல்லப்போட்டி 6-6-69

இடம்: யாழ். விளையாட்டு மைதானம்
நேரம்: பி. ப. 3 மணி

## பழைய மாணவர் தினம் 7-6-69

இடம்: வைத்தீஸ்வர வித்தியாலயம்
நேரம்: மு. ப. 9—பி. ப. 6 மணிவரை

நிகழ்ச்சிகள்:

காலை: O கைப்பந்தாட்டம் O பூப்பந்தாட்டம் O டெனிஸ்ஆட்டம் O மற்றும் பலநிகழ்ச்சிகள்

மதிய உணவு

மாலை: O பொதுக்கூட்டம் O தேநீர் விருந்து

பழைய மாணவர்கள் மேற்குறித்த மூன்றுநாளைய நிகழ்ச்சிகளிலும் சமுகமளித்தும் கலந்தும் ஊக்குவிப்பார்களாக. மூன்றும் நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்கள் தயைகூர்ந்து ஐந்து ரூபா (வருடாந்த சந்தா உட்பட) 31-5-69க்கு முன் சங்கக் காரியதரிசிக்கு அனுப்பிவைப்பார்களாக.

அதிபர்.

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம். 1571


## 'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-4

சென்றவாரத்துக்கேள்விகளுக்கு சரியான விடைகள் பின்வருமாறு: 1. விமானப்படைத் தலைவர் நூர் கான். 2. கோலாலம்பூர். 3. தியாகையர், முத்துசாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள், 4 திரு. தொண்டமான் ஒரு நியமன அங்கத்தவர். 5. கனக சுப்புரத்தினம். 6. பொலன்னறுவை. 7. ஜெகஜீவன்ராம். 8. பவணந்திமுனிவர். 9. பூரம். 10. வாழைச்சேனை.

### முதலாம் பரிசு

இப் போட்டியில் நேயர்கள் பலர் எம்மைத் தோற்கடித்து விட்டனர். எடுத்த எடுப்பிலேயே முற்றிலும் சரியானவிடை ஒன்று கிடைத்து விட்டது. அனுப்பியவர்:- இ. செல்வநாதன், காட்டு நாவல், ஆவரங்கால், புத்தூர்.

### இரண்டாம் பரிசு

இரண்டாவதாக இழுக்கப்பட்ட முற்றிலும் சரியான விடையை அனுப்பியவர்:- வே. நவரத்தினம், 'பள்ளம் தோட்டம்', துன்னாலை தெற்கு, கரவெட்டி.

### இந்த வாரக் கேள்விகள்

1. ஜோர்டானின் தலைநகரம் எது? 2. ஒரு நாழிகையில் எத்தனை நிமிடங்கள்? 3. மலைபடுகடாம் என்றால் என்ன? 4. இலங்கையின் திட்ட, பொருளாதார மந்திரி யார்? 5. எதியோப்பிய சக்கரவர்த்தியின் பெயர் என்ன? 6. உலகிலே மிகப் பெரிய பிராணி எது? 7. மேற்கிந்திய தீவுகளில் எது பெரியது? 8. பிரிட்டிஷ் அரசி சமீபத்தில் எந்த நாட்டுக்கு விஜயம் செய்தார்? 9 இலங்கையில் காலை 9 மணி என்றால் லண்டனில் எத்தனை மணி? 10. அரைநாளில் அரைக்கோழி அரை முட்டை இட்டால் ஒரு நாளில் ஒரு கோழி எத்தனை முட்டையிடும்?

# இஸ்லாத்தின் இறைவணக்கம் ஈடிணையற்ற தத்துவமாகும்

## நம்பிக்கையுடன் தொழுதால் நினைத்ததெல்லாம் வெற்றி

— எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் —

அதிபர், வண்ணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்

இஸ்லாத்தின் முதற் கடமை ஏக இறைவனைப் பரிபூரணமாய் ஒப்புக்கொள்ளுதல் என்பதை முன்னர் விளக்கினோம். அவ்வாறு ஒப்புக்கொள்பவர் அவ் இறைவனை வணங்குதல் கடமையே. ஆகவே ஒவ்வொரு இஸ்லாமியனும் தினம்ஐந்து வேளை உரிய முறைப்படி தொழுதல்வேண்டும். இறைவனை ஒப்புக்கொள்ளுதலும் அவ்வாக்கியத்தை அட்சர சுத்தியுடன் மொழிதலும் அதன் கருத்தையுணர்தலும், முற்றுப்பெற்றவுடன் செயற்படுதல் அவசியமாகும். அங்ஙனஞ்செயற்படுதலில் முதற்படி இறைவனைத் தொழுவதன்மூலம் இறைவன் எஜமான் என்பதனையும் நாம் அந்த எஜமானின் அடிமை என்பதையும் நிரூபித்தாகவேண்டும்.

தொழுகை என்பது வணக்கம், வந்தனை என்றுபொருள் படினும் அறபி மொழியிலே ''சலாத்'' என்று கூறும் தொழுகை இன்னுமொரு படியுயர்ந்து நிற்கின்றது. எவ்வாறெனில், தொழக் கூடியஒருவன் தனது உடல், உடை, தொழுமிடம் ஆகிய வற்றை பரிசுத்தமாக ஆக்குதல் முதற்கடன். இதன்பின்னரே இறைவனுடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும். (தொழுதல்) இதைத் திரிகரண சுத்தி என்போம்.

இறைவனின் முன்னிலையிலே ஒருமைப்பாட்டோடு கைகட்டி நின்று ஒரு முஸ்லிம் செய்யும் சத்தியப்பிரமாணம் மிகவும் வியக்கத் தக்கதொன்றாகும். என்னவென்பதைக் கவனியுங்கள்

'இறைவா, நான் இவ்வுலகிலுள்ள வஸ்துக்களின் தொடர்புகளையும், எனது வணக்கம், எனது வாழ்வு எனது உயிர் ஆதியவற்றையும் அர்ப்பணித்து உன்னோடு தொடர்புள்ளவனாக உன்முன்னிலையில் நிற்கின்றேன். எனது முகத்தை உன்னளவில் திருப்பிவிட்டேன் என்பதே அந்தச்சத்தியப்பிரமாணத்தின் உச்சத்தானமாகும்.

1. பின்னர் ''இறைவா, உனக்கே புகழ் அடங்கலும் நீ சிருட்டி கர்த்தா. உனது சிருட்டிகளுக்குப் பாரபட்சமின்றி உணவும் ஏனையவும் அளிப்பவன். உன்னைத் தொழுதுஉனது கடமைகளை ஏற்று நடப்பவர்களுக்கு விசேட உயர்பதவிகளை அளிப்பவன்'' என்று இறைத் தன்மையின் புகழ்ச்சிகளைக் கூறுகின்றேன்.

2. அடுத்து ''நீ மேற்கூறிய தன்மைகளடங்கிய வனுகையால் நீதான் எஜமான், மறுமை யாவரையும் ஒன்று சேர்த்து நீதந் தவறாது நீதி செலுத்துபவன். எனவே உன்னையே வணங்குகின்றோம். மேலும் உன்னிடத்திலேயே உதவியைத்தேடுகின்றோம்'' என்று நமது அடிமைத்தன்மையையும், இறைவனுடைய அரசுத்தன்மையையும் புலப்படுத்தும் ஓர்உறுதிப்பாட்டையும் பிரகடனப்படுத்துகின்றோம்.

3 அதன்பின்னர், இறைவனே! எம்மை நேரா வழியிலே நீ நல்லதென்று கற்பித்த அந்த வழியிலே நாயகம் (ஸல்) அவர்கள் காட்டித்தந்த மெய்ஞானவழியிலே நடத்தாட்டுவாயாக. [illegible]து கட்டளைகளை மீறி ந[illegible]ந்து வழிகெட்டார்களே அந்தக் கூட்டத்தில் எங்களை ஆக்கிவிடாதிருப்பாயாக; இறைவனே எங்களது [illegible]ரார்த்தனைகளை ஏற்றுக் [illegible]ள்வாயாக' என்று கேட்கின்றோம். இவைகளே ஒவ்வொரு முஸ்லிமும்கேட்டுக் கொள்ளும் முதல் உறுதி மொழிகளாகும், இதற்குரிய அறபி மொழிகளாலேயே இவை கூறப்படவேண்டும். இங்கே சில முக்கிய சிறப்புகளையும் கவனிக்கவேண்டும்.

மேலே கூறிய மூன்று பிரகடனங்களைத் தொடர்ந்து பிரார்த்தனையும், வேண்டுதலும், இம்மை மறுமைப் பாக்கியங்களின் பலனும் அமைந்தவைகளை இறைவனிடங்கேட்பனவும் அடங்கியதாகத் தினமும் ஐந்து வேளைகளிலும் முன்னர் குறிப்பிட்ட சுத்திகரிப்புக்



களுடன் தொழுகின்றோம். இஸ்லாத்திலே நாம் காணக்கூடிய சிறப்பியல்களிலே உலக முஸ்லிம்கள் யாவரும் குர்ஆனை அறபி பாஷையிலேயே ஓதுவார்கள். ஆங்கிலேயராக இருக்கலாம். ஜப்பானியராக இருக்கலாம் அல்லது ஆபிரிக்கராகவோ அன்றி எந்தப்பாஷை பேசுவோராகவும் இருக்கலாம். முஸ்லிம்களாக இருப்பவர் யாவரும் ஒரே அறபி மொழியினாலே கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். இறைவனைத் தொழும்போதும் வேண்டுதல் புரியும்போதும் அறபி மொழியிலேயே நிகழ்த்துவார்கள்.

இதனாலே ஒரு பிரார்த்தனையில் எத்தனை பாஷை பேசும் மக்களிருப்பினும் யாவரும் பிரார்த்தனையைச் செவ்வனே செய்து கொண்டிருப்பார்கள்.

அறபி மொழியைத் தேவையான அளவாவது (தொழுகை) கற்றுப்பொருள் விளங்கி எல்லோரும் அறபி மொழியிலே கூட்டுப் பிரார்த்தனையாயினும் தனிப்பட்ட பிரார்த்தனையாயினும் செய்து ஏககாலத்தில் ஏக மொழியில் மன ஒருமைப்பாடடைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இத்துணை நோக்கங்களுக்கமைவாக உருவாக்கப்பட்ட வணக்கத்தை முஸ்லிம்கள் உதாசீனம் செய்யலாமா? சென்றது விட்டது. இனியாவது முஸ்லிம்கள் இறை வணக்கத்தை ஐங்காலமும் தவறாது உரிய முறைப்படி உரிய காலத்தில் நிகழ்த்தி இறைவனுடைய அருளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இந்த ஐங்காலத் தொழுகை மானக்கேடான செயல்களையும், பாபமான காரியங்களையும் செய்ய விடாது தடுத்துக் கொள்ளும். அத்துடனே எப்போதும் உடலைத் தூய்மையும் சுகந்தமும் உடையதாக வைத்துக்கொள்ளும். உடையைக்கூடச் சுத்தமாக வைத்துக் கொள்ள ஒழுங்கு செய்யும். இதன் காரணமாகவே உடலைவிட்டு உயிர் பிரியும் வரை ஒவ்வொரு வகையில் இறைவணக்கம் செய்தேயன்றி அவன் முஸ்லிமாகக் கணக்கெடுக்கப்பட மாட்டான் என்று திருமறை அறைகூவுகின்றது. தூக்கு மேடையிலேகூட வணங்கிக் கொள்ளஇடங்கேட்டார்கள் ஸகாப்பாக்கள். அவற்றைக் கொண்டு அவர்கள் வெற்றியும் கண்டார்கள். அந்த வெற்றியை விரும்பும் எவரும் தவறாது முழு நம்பிக்கையுடன் தொழுது கொள்ளட்டும்.

(தொடரும்)

# அமரர் டாக்டர் ஸாகிர் ஹுசேன்

## ஒரு சோதிடக் கண்ணோட்டம்

மேல்கரவை சோதிடர்

— காவ. சிவப்பிரகாசன் —

'பாரதரத்தினம்'', ''பத்மபூஷணம்'' ஆகிய விருதுகள் கொண்ட அமரர், பாரத ஜனாதிபதி, டாக்டர் சாகிர் ஹுசேன் அவர்கள் 3-5-69 காலை 11-20 மணிக்கு இவ்வுலக வாழ்வு நீத்தார்.

அமரர் சாகிர்ஹுசேன் அவர்கள் 8-2-1897 திங்கட்கிழமை காலை அவதரித்தார். இலக்கினம்: கும்பம் என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நட்சத்திரம்: அச்சுவினி. யோகம்: சுபநாம யோகம்.

சந்திர இலக்கின கேந்திரம் பெற்றுக் கேந்திராதிபத்திய தோஷ அமைவுடன் காணப்படுகின்றார். எனவே புதன் புத்தி பெரியாருக்கு மாரகத்தைக் கொடுக்க ஏதுவாயது.


பெரியாரின் ஜாதகத்தில் சந்திரன் மேட இராசியில் உள்ளார். சனிபகவான் 7-3-1969ல் மேட இராசிப் பிரவேசஞ் செய்துள்ளார். எனவே தற்பொழுது பெரியாருக்கு ஏழரைச்சனி நடுக்கூறு நடைபெறுகின்றது. டாக்டரவர்களின் ஜாதகத்தில் இப்போது சனிபகவானின் மூன்றாவது சுற்றுலா.

சாதாரண குடும்பத்தில் பிறந்த டாக்டர் சாகிர் ஹுசேன் அவர்கள் 22ஆண்டுகள் ஜமிலியா இஸ்லாமிய பல்கலைக்கழகத் துணைவேந்தராகக் கடமையாற்றியுள்ளார். டாக்டர் அவர்கள் பின் துணை பாரத ஜனாதிபதியாகவே ஆகி 13-5-1967ல் பாரத ஜனாதிபதியாகப் பதவியேற்றார்

ஆட்சிக்குப் பலனுண்டா என்பது வினா?

கலைச்செல்வமும் பின் அரசும் பெற்ற காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அவர்களுக்கும் இலக்கினம் கும்பம். பத்தாமிடமாய கர்மஸ்தானத்தில் சனிபகவான் சஞ்சாரம்.


கீழே (அமரர்) பாரதப் பிரதமர் டாக்டர் சாகிர் ஹுசேன் அவர்களின் ஜெனனஜாதகம் கொடுக்கப்படுகின்றது.




ஜனாதிபதியவர்கள் ஜாதகத்தில், இலக்கினாதிபர்சனி பத்தாமிடத்தில சனி கேந்திரபலத்துடன் சஞ்சாரம் செய்கிறார். பன்னிரண்டாமிடத்தில் சூரியன், புதன், இராகு ஆகிய கோள் களின் நிலை பிறதேச சஞ்சாரத்தையும், அன்னிய நாடுகளில் கல்விபெறும் வாய்ப்பையும்

ஏற்கனவே 'ஈழநாடு' வாரமலர் 11-3-1969 இதழில் சனிபகவான் பற்றிய- சனி பெயர்ச்சிச் சோதிட ஆராய்ச்சிக் கட்டுரையில் ''சனி பகவான் தமது மூன்றாவது சுற்றுலாவில், சந்திரன் நின்ற இராசியைக் கடக்கும்போது அந்நபருக்கு, அதிகமாக மாரகத்தையே கொடுத்து விடுகின்றார். என்று எழுதியுள்ளேன்.

சோதிடத்துறையில் 'அதிஷ்ட எண் ஞானம்' ஒரு பிரிவு. இங்கே அதிர்ஷ்ட எண் ஞானமுறை கொண்டு நோக்கும்பொழுது பல இரகசியங்கள் புலப்படுகின்றன.




காலம்சென்ற இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா 8-1-1889. அன்னாரின்பிறப்பு எண் 8. கூட்டு எண் 8, வருட கூட்டு எண் 8. ஒரே எட்டு எண் ஆதிக்கம்தான்.

இதேபோன்று பெரியார் டாக்டர் சாகிர் ஹுசேன் அவர்களின் பிறப்பைக் கவனிப்போம்.

பெரியாரின் பிறப்பு தேதி 8-2-1897. பிறப்பு எண் 8. கூட்டுஎண் 8 2 1 8 9 7 =35 - 8.

(6-ம் பக்கம் பார்க்க)

என் வாழ்வில் ஒரு நாள்—(11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பிராணி எது? 7. மேற்கிந்திய தீவுகளில் எது பெரியது? 8. பிரிட்டிஷ் அரசி சமீபத்தில் எந்த நாட்டுக்கு விஜயம் செய்தார்? 9 இலங்கையில் காலை 9 மணி என்ருல் லண்டனில் எத்தனை மணி? 10. அரைநாளில் அரைக்கோழி அரை முட்டை இட்டால் ஒரு நாளில் ஒரு கோழி எத்தனை முட்டையிடும்?

# விகட கவிதைப் போட்டி-(4)

சென்ற போட்டியில் நேயர்கள் வட்டிக்கடை முதலாளியைப் பிய்த்துப் பிடுங்கிவிட்டார்கள். மிகத் தரமான பல கவிதைகள் வந்தன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிருேம்.

## பரிசு பெறும் கவிதை

எட்டடி நோக எடுத்தடி கொப்பளிக்க
வட்டிக் கடை முதலாளி வாருரே-செட்டியவர்
நாளாந்தம் ட்டிவிடும் வட்டியையே
எண்ணி எண்ணி
ஆளே ஓர் ஐ்ப அந்தர் ஆகிவிட்டார்.

இதை எழுதியவர்: செல்வி. பி. சசிகலா, 23/5, எல்லை வீதி வடக்கு, மட்டக்களப்பு.

## பாராட்டுக்குரியவை

சிரிப்புதிர்க்க பேச்சுத்தேன் சிந்த வுடன் நெஞ்சைக்
கரிக்கு முப்புக் கைப்புச் சொல் கக்க-நரி மூளை
முட்டை வயிறர் முகபா வத்திலும் நடிகரெங்கள்
வட்டிக் கடை முதல்வர் வாருர்.

மேற்படி கவிதையை எழுதியவர்: எஸ். எல். சவுந்தரநாயகம், (வன்னியூர்க் கவிராயர்), நேரிய குளம், மதவாச்சி (வழி)

'அனங்கன்', 26, வைமன் ரேட், யாழ்ப்பாணம்; அன்னலட்சுமி சிவகுரு, யாதம்பை, மாதகல்; செ. திருநாவுக்கரசு, முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டி, ரி. சோமசேகரன், மெக்கானிக் நிலையம், இணுவில் ஆகிய நேயர்களும் சிறந்த கவிதைகள் எழுதினுர்கள்.

## இன்றைய போட்டி

அடுத்த போட்டிக்கு நீங்கள் 'போலிச் சாமியார்' மீது நாலு அல்லது ஐந்து வரிகளுக்கு மேற்படாத ஒரு விகட கவிதை புனைந்து அனுப்பவேண்டும். எங்கே பார்ப்போம் உங்கள் கவித்திறனை!

### நிபந்தனைகள்

ஒவ்வொரு போட்டிக்குரிய விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 20-5-69க்கு முன் பொதுஅறிவுப் போட்டி (4), 'ஈழநாடு'. த. பெ. இலக்கம் 49 யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்துசேர வேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும். போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது.

—கூப்பன்—

**'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-(4)**

பெயர்.........................................

விலாசம்.........................................

.........................................

திகதி.....................

—கூப்பன்—

**'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(4)**

பெயர்.........................................

விலாசம்.........................................

.........................................

திகதி.....................

தக்கதொன்ருகும். என்ன வென்பதைக் கவனியுங்கள்

'இறைவா, நான் இவ்வுலகிலுள்ள வஸ்துக்களின் தொடர்புகளையும், எனது ...ந்து வழிகெட்டார்களே அந்தக் கூட்டத்தில் எங்களை ஆக்கிவிடாதிருப்பாயாக; இறைவனே எங்களது ...ரிக்கைகளை ஏற்றுக் ...ள்வாயாக'' என்றுகேட் ...வனைத் தொழும்போதும் வேண்டுதல் புரியும்போதும் அறபி மொழியிலேயே நிகழ்த்துவார்கள்.

வெற்றியை விரும்பும் எவரும் தவருது முழு நம்பிக்கையுடன் தொழுது கொள்ளட்டும்.

(தொடரும்)

என் வாழ்வில் ஒரு நாள்—(11)

# 'ஓர்மமும் ஒய்யாரமும் ஒப்பற்ற வலிமையும் ஒருங்கே வரப் பெற்றவன்'

**சொன்னது: சிறுத்தை**
**எழுதியது: வி. என். பி.**

ஓகோ, நாட்டை விட்டு காட்டுக்கு வந்துவிட்டீர்களோ? நல்லவேளை, நீங்கள் வருவதை முன்கூட்டி தெரிவித்திருக்காவிட்டால் இப்பொழுது உங்களில் பாதி என் வயிற்றுக்குள் இருக்கும். ஆமாம், நான் நரமாமிசமும் சாப்பிடுவேன். ஆனுல் எப்பொழுதுமல்ல.

என்னைப்போல ஒய்யாரமான, ஓர்மமுள்ள, ஒப்பற்ற வலிமையுள்ள மிருகத்தை நீங்கள் இந்தக் காட்டில் காணவே முடியாது. எருமையும் யானையும் என்னைவிடப் பெரியவர்களாயும் எடை கூடியவர்களாயும் இருக்கலாம். ஆனுல் நிறைக்கு நிறை நானே பலசாலி. என் அண்ணன் புலி இருக்கிருனே! அவனை நீங்கள் இந்த நாட்டில் காணமுடியாது. இந்தியா, மலேசியா முதலிய இடங்களில்தான் அவன் வசிப்பது. அவன் மகாபுத்திசாலி. வேட்டையாடுவதில் அவனைவிட தந்திரம் மிக்கவன் நான். சிங்கத்தை நீங்கள் கண்டிருக்கமாட்டீர்கள். அதுவும் இந்நாட்டில் வாழ்வதில்லை. இந்தியா, ஆபிரிக்கா முதலிய இடங்களில்தான் இருக்கும். அதைப்போல மூர்க்கமான பிறவி உலகத்தில் இல்லை என்று சிலர் சொல்லுவார்கள். ஆனுல் சிங்கத்தைவிட மூர்க்கமானவன் நான்.

உங்கள் வீட்டில் வளர்க்கிறீர்களேபூனை! அந்தப்பூனையின் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான் நானும். பூனையின் தந்திரங்களும் தன்மைகளும் தேக அமைப்பும் நடையும் குணங்களும் என்னிடத்தில் கூடியளவு நீங்கள் காண்பீர்கள். பூனைக்கு முன்னங்கால் நகங்களை உள்ளுக்கு இழுத்துக்கொள்ளும் சக்தி இருப்பது போலவே நானும், வேட்டையாடி மிருகங்களைக் கொல்லும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் நகங்களை வெளியே காட்டமாட்டேன். பூனைக்கு நீங்கள் உணவு கொடுக்காவிட்டால் அது பசி வந்தபோது பகல் என்றும் பாராமல் இரவு என்றும் பாராமல் வேட்டையாட வெளிக்கிட்டுவிடும். அதைப்போல எனக்கும் பசி வந்துவிட்டால் இரவு பகல் என்று பார்க்க மாட்டேன்.

என்னுடைய தோலில் மஞ்சள், கறுப்பு புள்ளிகள் இருப்பதைக் கவனித்தீர்களா? இது இயற்கையினுல் கொடுக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம். காட்டுமரத்தின் ஒரு கிளையில் நான் படுத்திருந்தால் சூரிய ஒளி பொட்டுப்பொட்டாக மஞ்சள் நிறத்தில் விழுவதும், மர இலைகளின் நிழல்கள் கறுப்புப்பொட்டுகளாக விழுவதும் என்னை இயற்கையுடன் ஒன்றிச்சேர்த்து நான் இருப்பதை மிருகமோ மனிதரோ பார்க்கமுடியாமல் செய்துவிடுகின்றன. மரத்தில் நான் இருப்பதைக் கண்டுகொள்ள முடியாத மிருகங்கள் கூச்சமின்றி என்னை நெருங்கும்போது நான் 'லபக்' என்று பாய்ந்து கொன்றுவிடுவேன். மிருகங்களைக் கொல்வதுதானே என்னுடைய பிழைப்பு? வேண்டுமென்ரு கொல்லுகிறேன்? இல்லவேயில்லை. என் பசிப்பிணியை தீர்க்கத்தான். உங்களைப்போல கண்டநேரமெல்லாம் நான் சாப்பிட்டு வயிற்றை நிரப்புவதில்லை. பசி வயிற்றைப் பிடுங்கினுல் வேட்டைக்குக் கிளம்பிவிடுவேன். இரை அகப்படும்வரை காடு முழுவதும் அலைந்துதிரிவேன். இரை கிடைத்ததும்வயிருர உண்டுவிட்டு மூன்று நான்கு நாட்கள் பேசாமல் படுத்து உறங்கிவிடுவேன்.

என்னிலும் பார்க்க மூன்று மடங்கு அதிக நிறையுள்ள மிருகங்களையும் நான் மிகச் சுலபமாக வேட்டையாடிக் கொன்றுவிடுவேன். அவ்வளவு பாரத்தையும் வாயில் கவ்விச் சுமந்துகொண்டு ஒரு மரத்தின்மீது ஏறும் தைரியமும் எனக்கு இருக்கிறது. வேட்டையாடிய மிருகத்தில் நான் தின்றதுபோக மிகுதியை பத்திரமாக ஒரு மரக்கிளைக்குள் சொருகி வைத்துவிட்டு மறுபடியும் பசி எடுக்கும்போது திரும்பி வந்து சாப்பிடுவேன். மாமிசத்தை இரண்டு மூன்று நாட்கள் கழித்து உண்பதையே நான் பெரும்பாலும் விரும்புவேன். இடையில் நரி முதலிய மிருகங்கள் அதை விழுங்காமல் இருப்பதற்காகவே மரத்தின்மேல் நான் ஒளித்துவைப்பது.

நான் முன்பு கூறியது போல வேட்டையாடுவதில் என்னைப்போல சமர்த்தன் இந்தக்காட்டில்வேறுயாடும் கிடையாது.

சில சமயங்களில் வேட்டை கிடைக்காவிட்டால் குரங்குகள் கூடியிருக்கும் ஒரு மரத்தின் கீழ் படுத்து நித்திரைபோற் பாசாங்கு செய்வேன். குரங்குகள் மரத்திலிருந்து வயிறு நிறையச் சாப்பிட்ட பின்னர் கீழே இறங்கிவந்து தங்கள் குலத்துக்குரியசேஷ்டைகளை என்மீது காண்பிக்கும். ஒன்று என் வாலைப் பிடித்திழுக்கும். இன்ஞென்று என் காதைத் தோண்டிப் பார்க்கும். வேருென்று என் மீது தொங்கி விழுந்து கூத்தாடும். நாஞே ஆடாமல் அசையாமல் படுத்திருப்பேன். சமயம் வாய்க்கும்போது வாட்டசாட்டமான ஒரு குரங்கை 'டபார்' என்று அப்பிக்கொள்வேன். இதே தந்திரத்தைக் கையாண்டு நான் மான்களையும் பிடிப்பதுண்டு.

எருமைக்கூட்டம் மேய்ந்து கொண்டிருக்கும். நல்ல கொழு கொழுவென்ற ஒரு கன்றில் என்பார்வை விழுந்துவிடும். உடனே என்னுடைய வாடை அதுக்குத் தெரியாதபடி எருமைச் சாணத்தில்விழுந்து புரண்டு தேகம் முழுவதும் பூசிக் கொள்வேன். நான் மிகவும் நெருக்கமாகப் போனுலும் எருமைக்கன்று ஓடமாட்டாது. ஒரே தாவு தாவி அதைப் பிடித்து விடுவேன்.

புதரும் பாறைகளும் நிறைந்த ஓர் ஒதுக்கில் என் மனைவி பிள்ளைப் பேற்றுக்கு இடம் தேடிக் கொள்ளுவாள். நாங்கள் கூடி மூன்று மாதத்துக்குப்பின் பிரசவம் நடக்கும். இரண்டு முதல் நான்கு குட்டிகளைப் பெற்றெடுப்பாள். அவர்களுக்குத் தீனி கொடுப்பது, வளர்ப்பது, வேட்டை பழக்குவது எல்லாம் அவளுடைய கடமை. நான் கிட்டவும் போவதில்லை. நான் என் பாட்டுக்கு வேட்டையாடுவேன். அவளும் தன்பாட்டுக்கு வேட்டையாடுவாள். ஆறுமாதம் கழித்துக் குட்டிகளும் எங்களைப் போலவே தனித்தனியாக வேட்டைக்குக் கிளம்பிவிடுங்கள்.

சரி, பசி வயிற்றைப் பிடுங்குகிறது. நான் வரப் போகிறேன் போகும்போது கவனமாகப் போங்கள். என்னுடைய குட்டிகள் எங்கேயாவது ஒழிந்திருந்து உங்கள் மீது பாய்ந்துவிடப் போகின்றன!

...கத்தில், இலக்கினுதிபர் சனி பத்தாமிடத்தில சனி கேந்திரபலத்துடன் சஞ்சாரம் செய்கிருர். பன்னிரண்டாமிடத்தில் சூரியன், புதன், இராகு ஆகிய கோள் களின் நிலை பிறதேச சஞ்சாரத்தையும், அன்னிய நாடுகளில் கல்விபெறும் வாய்ப்பையும் அள்ளிக் கொடுத்தது.

பெரியார் ஜாதகத்தில், சூரியன் அத்மக்காரராகிக் காரகாம்ச சஞ்சாரஞ் செய்கின்ருர். சூரியன் காரகாம்சத்தில் இருந்தமையால் பெரியாருக்குத் தேசசேவை அரசியல் தலைமை இவற்றைக் கொடுத்தது. (ஜெமினி சோதிடம் சுலோ.136)

வியாழன் மகாதெசை சனி புத்திக் காலத்தில்தான் பெரியாருக்கு அரச அந்தஸ்து, அகில பாரத ஜனுதிபதி பதவி கிட்டியது. புதன் அவர்களின் பிறப்பைக் கவனிப்போம்.

பெரியாரின் பிறப்பு தேதி 8-2-1897. பிறப்பு எண் 8. கூட்டுஎண் 8 2 1 8 9 7 =35 - 8.

(6-ம் பக்கம் பார்க்க)

## விரக்தியும...

2-ம்பக்கத்தொடர்ச்சி)

யுமில்லை. ஏனெனில் வாழ்க்கையைப்பற்றிய கவலை இப்பருவங்களில் ஏற்படுவதில்லை. இறுதிப் பருவத்திலும் பிரச்னையில்லை. ஏனெனில் எல்லாம் கடந்த ஒரு நிலை அது.

ஆக, வாலிபப்பருவம், முதுமைப்பருவம் ஆகிய பருவங்களில்தான் கவலைகளும் பிரச்னைகளும் தோன்றுகின்றன. ஆனுல் இந்தப் பருவங்களிலும் முதல் மூன்று பருவங்களில் வாழ்ந்ததுபோல் வாழக் கற்றுக் கொண்டால் கவலைக்கு இடமேது?

(தொடரும்)


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

பலாலி கடற்றொழிலாளர் குடியேற்றத் திட்டத்திற்குக் கிழக்குப் பக்கமாக 24 பரப்பு தென்னந்தோட்டம். ச. பாலசுப்பிரமணியம், வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை. 1102

வண்ணுர்பண்ணையில் சகல வசதிகளோடு கூடிய கல்வீட்டுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு மு. மாணிக்கம், 19/3, சிவப்பிரகாசம்வீதி, யாழ்ப்பாணம். 1124

கைதடி அரசாங்க வயோதிபர் இல்லத்திற்கு முன்பாக, கைதடிச்சந்திக்குக் கிட்ட கண்டி ரேட்டில் ஆறு பரப்புக்காணி உடனே விற்பனைக்கு உண்டு. விபரங்கள்: அதிபர், செவிடர் குருடர் பாடசாலை, கைதடி. 998

### தேவை

யாழ் நகரில் பிரபல்யம் வாய்ந்த றேடியோ திருத்தும் ஸ்தாபனமொன்றிற்குப் பொறியியலாளர் தேவை. தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:1120, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ் பாணம். 1120

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வள்ளச்சாலையில் தச்சுத்தொழிலாளர்களும், வள்ளவேலை பயில்வோரும் உடன் தேவை. பயில்வோருக்கும் வேதனம் வழங்கப்படும். விண்ணப்ப மூலமோ, நேரிலோ தொடர்புகொள்ளவும். அதிபர், செல்வம் வள்ளச்சாலை, முல்லைத்தீவு. 1113

### கல்வி

தேசிய ஹோமியோபதி ஸ்தாபனத்தினரால் நடாத்தப்படும் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. நீங்களும் படித்து டாக்டராகலாம். கனிஷ்ட பொதுத்தராதரம் உடையவர்களுக்கு வெற்றிடம் உண்டு. விபரங்களுக்கு 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1123


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# பிறருக்கு வைத்தியம் செய்யுமுன் தமக்கே வைத்தியம் பார்க்க வேண்டிய நிலை

## இன, மத பூசல் தலையெடுக்க இங்கு காரணகர்த்தர்கள் யார்?

இந்த நாட்டில் மீண்டும் இன வேற்றுமைகளைக் கிளப்பி கலகத்தையும் குழப்பத்தையும் தூண்டிவிடுவதற்கு பொறுப்பற்ற சில விஷமிகள் முனைந்துநிற்பது குறித்து அரசாங்க வட்டாரங்கள் கவலைகொண்டிருப்பதாக 'டெயிலி நியூஸ்' பத்திரிகை நேற்று முதல்பக்கத்தில் கொட்டை எழுத்தில் ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாட்டின் அமைதியைக் குலைத்து குழப்பத்தையும் கலகத்தையும் தூண்டிவிடுவதற்கு சில சக்திகள் முனைந்துள்ளது பற்றி அரசாங்க வட்டாரங்கள் இப்போதாவதுதெரிந்து கொண்டிருக்கிறதேயென்பதை அறிய ஓரளவு ஆறுதலளிக்கிறது. என்றாலும் அரசாங்கவட்டாரங்கள் இந்த சக்திகள் பற்றி அறிந்துள்ளது போதாதென்றே தோன்றுகிறது.

'மாவட்டசபை' என்ற பூதத்தைக்கிளப்ப முயன்று அது பெரிதாகாமல் விட்டதும் 'நாம் தமிழர்', தி.மு.க- என்ற பூச்சாண்டியைக் கிளப்பி தமிழ்துவேஷத்தை ஏற்படுத்துவதில் ஈடுபட்ட சக்திகள் அது வெற்றியளிக்குமா வெற்றியளிக்காதா என்ற அவநம்பிக்கையிலிருக்கையில் இப்போதுவடக்கேயுள்ள மூன்று பௌத்த தமிழ்ப்பாடசாலைகள் ஒரு விவகாரமாக்கப் பட்டிருப்பது அவர்களுக்கொருவரப்பிரசாதமாகக் கிடைத்திருக்கிறது.

குழப்பத்யையும் கலகத்தையும் தூண்டிவிடமுயற்சி செய்யும் சக்திகள் எவை?

இந்த இடத்தில், ''வைத்தியரே நோயாளிக்கு வைத்தியம் செய்து குணப்படுத்துவதற்குமுன்னர், உங்கள் நோய்க்குவைத்தியம்செய்து குணப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று ''டெயிலி நியூஸ்'' மற்றும் தேசியப்பத் [...]

சாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த சிலஅமைச்சர்களுக்கும் சொல்ல வேண்டியிருக்கிறது.

துரும்பைத்தூணுக்குவதில் நமது பொறுப்புள்ள பத்திரிகைகளும் பொறுப்புள்ள அமைச்சர் சிலரும் சமர்த்தர்கள்.

இந்திய சேலை அணியும் பெண்களை சுட்டுத்தள்ள வேண்டுமென்று நமது பிரம்மச்சாரி அமைச்சர் தஹநாயகா கூறிவருகிறார் தமிழ்ப்படங்களைத் தடை



செய்யவேண்டுமென்பது அவரது தற்போதைய பிரசாரம்.

கல்விஅமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை வடக்கில் அளவுக்கதிகமான ஆசிரியர்களும் விஞ்ஞான கூடவசதியும் இருப்பதாக பிரசாரம் செய்து வடக்கில் விஞ்ஞானக் கல்விவளர்ச்சிக்கு இடையூறுசெய்வதற்கு தமக்குத்திருப்திகரக் கூடிய [...]

போர்தனைக்கு ஆசிரியர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதன் மூலம் சாதிப்பிரச்னை, இனப்பிரச்னை, மதப்பிரச்னை ஆகியவைகளை ஒன்றாகவே கிண்டிவிடுவதற்கு வழிவகுத்திருக்கிறார். மூன்று பாடசாலைகள் விவகாரம் என்னவென்றே தெரியாமல் பௌத்தமத குருக்களையும், பௌத்த இயக்கங்களையும் 'டெயிலி நியூஸ்' போன்ற பத்திரிகைகள் இழுத்துவிட்டு நிலைமையை மோசமாக்க உதவியளித்துவருகின்றன. எனவே குழப்பத்தையும் கலகத்தையும் தூண்டி நாட்டின் அமைதியையும் தேசீய ஐக்கியத்தையும் சீர்குலைக்க முனைந்திருக்கும் சக்திகள் எவையென ஆராய்ச்சி நடத்தத் தவையில்லை. கைப்புண்ணுக்குக் கண்ணுடி வேண்டுமா?

அமைச்சர்களும், பத்திரிகைகளும் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்தால் அரசாங்க அதிகாரிகளும், சாதாரண மக்களும் விஷமத்தனத்துக்கு இடமளிக்க மாட்டார்கள்.

மூன்று பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதை தமிழரசுக்கட்சி மட்டும் எதிர்க்கவில்லை. முன்னுள் வவுனியா எம். பி. திரு. சுந்தரலிங்கமும் எதிர்க்கிருர். மற்றும் இப்பகுதி பொதுமக்களின் அபிப்பிராயமும் பெரும்பாலும் இதேதான் சிங்களம் படிப்பதையோ, பௌத்த மதத்தைத் தழுவுவதையோ யாரும் எதிர்க்கமாட்டார்கள். இது அவரவர் சொந்த விஷயம்.

### சுந்[...]ரும் தேர்தலும்

திரு. சுந்தரலிங்கம் அடுத்த பொ[...] தேர்தலில் காங்கே[...] தொகுதியிலும் திருக்கோணமலைத் [...]


வர் அவர் என்பதில் அபிப்பிராய பேதமிருக்க இடமில்லை தமிழ்த் தலைவர்கள் ஒன்றுசேர்ந்துஓர் இயக்கமாக இயங்கினுல் மற்றவர்கள் இங்கு தலையிட்டு நிலைமையைத் தமது இலாபத்துக்குப் பயன்படுத்த முன்வரமுடியுமா?

### மகாபுத்தி சாலிகள்

தமிழர்கள் அதிலும் ஈழத்தமிழர்கள் இன்னும் குறிப்பாகச் சொன்னுல் யாழ்ப்பாணத் தமிழர்கள் தங்களைவிட மகாபுத்திசாலிகள் உலகில் வேறு எவரும் கிடையாது என்ற இறுமாப்புடையவர்கள் என்று சொல்லலாம். இலங்கையில் அரசாங்க உத்தியோகமா, உயர் பதவிகளா, அமைச்சர்களுக்கே ஆலோசனை சொல்லிக் கொடுப்பவர்களா, எந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டாலும் அந்தத் திட்டத்துக்கு மூலகாரணமாகவும் அதை உருவாக்கிய சிற்பியாகவும் எங்கும் எல்லாமாக நமது தமிழர்தான் நின்றுர்கள், நிற்கிறுர்கள் என்று பெருமை பேசுபவர்கள், பேசியவர்கள்நம்மவர் தான். இதில் உண்மையும் இல்லாமலில்லை. ஆனுலும் இந்த மகாபுத்திசாலிகள்தான் யாழ்ப்பாணத் தமிழன், இந்தியத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன் என்று தமிழர்களையே பல பிரிவுகளாகவும் பிரித்துவைத்து வழிகாட்டினுர்கள் என்றும் சொல்ல வேண்டும்.

இதன் விளைவு, இலங்கை அரசியல் விடுதலை பெறுவதற்கு உதவியாக இருந்த தமிழனே இன்று தனக்கு விடுதலை வேண்டும் என்று குரல் எழுப்ப முடியாத நிலையில் எமது நாட்டுக்கு ஏன் சுதந்திரம் கிடைத்தது என்று ஏக்கத்துடன் கேட்கும் நிலையிலிருக்கிறுன்.

ஆங்கிலேயன் பிரித்தா[...] வதில் சமர்த்தன் என[...] பெயர் பெற்றவன். தமிழன் தம்மவரைப் பிரித்துக் கொடுத்து வழிகாட்டினுன். இரண்டிலும் நன்கு பாட[...] பயிற்சி பெற்[...] நமது பெரும்பான்மைச [...]



தமிழ்மக்கள் யாழ்ப்பாணத்தான், மலைநாட்டான், மட்டக்களப்பான் என்று மட்டுமல்லாமல் இன்னமும் பல பல சாதிகளாகவும், பல்வேறு கட்சிகளாகவும் இத்தனை பிரிவும்போதாதென்று நமது இளைஞர் சிலர் எம். ஜி. ஆர். கட்சி சிவாஜி கட்சியென்றும பிரிந்துநிற்பதைக் கண்டு வேதனைப் படுவதா வெட்கப்படுவதா?

### ஒற்றுமை எங்கே?

இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தவர்களான சிங்கள மக்களுக்கும் சிறுபான்மையினரில் பெரும்பான்மையினரான தமிழ்மக்களுக்குமிடையில் முன்னர் இருந்த ஐக்கியமும் நம்பிக்கையும் இன்று சீர்குலைந்திருக்கிறது. இதைச்சீர்செய்ய வேண்டுமென்பதில் ஆர்வம் இல்லாதவர்களில்லை. இதே சமயம் அரசியல் ஆதிக்கப் போட்டி, பதவிப்போட்டி காரணமாக சிங்களமக்கள் மத்தியிலும் தமிழ்மக்கள் மத்தியிலும் பல்வேறுகட்சிகள், சங்கங்கள், இயக்கங்கள் இருக்கின்றன. இதர சிறுபான்மைச் சமூகத்தினரான முஸ்லிம்மக்கள் மத்தியிலும் கூட கட்சிகள், இயக்கங்கள் இல்லாமலில்லை. ஆனுல் இந்தச் சமூகங்களுக்கிடையில் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்புக்கும் தமிழ் சமூகத்தில் இந்தப் பண்புபடும் பாட்டுக்கும் ஓரிரண்டு உதாரணங்களை மட்டும் எடுத்துக்காட்டலாம்.

மாவட்ட சபைகள் என்ருல் என்ன என்பது பற்றியோ, அவற்றின் அமைப்பு பற்றியோ எதுவுமே வெளிவராத சமயததிலும் மாவட்டசபை வரப்போகிறது என்று கேள்விப்பட்டதும் தென்னிலங்கையில் எங்கேயோ ஒரு மூலையில் ஒரு கிராம சபையோ பட்டினசபையோ, ''மாவட்ட சபை வேண்டாம்'' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியதுதான் தெரியும்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 16—5—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 துதிப்பாடல், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 ஞானமிர்தம், 8-30 சைவநீதி, 9-00 செய்திச் சுருக்கம். 10-00 செய்திச் சுருக்கம், 10-03 படத்திலிருந்து. 10-45 தொழிலாளர் நிகழ்ச்சி, 11-15 சிறுவர் மலர்,

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மலர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30பஜனை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-35 வானெலிச் சஞ்சிகை, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-45 கர்னுடகசங்கீதம், 10-30 செய்திச்சுருக்கம்.

### அமரர்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருமித்த எட்டுஎண்ணின் ஒலி, இப்பெரியாரை, நாடாளும் பாரத ஜனுதிபதி பதவிக்கே இட்டுச்சென்றது. எட்டு என்ற எண், இவர் ஒரு கடும் உழைப்பாளி என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

பெரியார் வாழ்வில் பல சிக்கல்களையும், பின்திடீர் மரணத்தையும் எதிர் நோக்கினுர் இதற்குரியகாரணம். அவர் வாழ்வில் ஐந்து என்ற எண் கலப்புப்பெற்றதேயாம்.

பெரியாரின் பிறப்பு நேரயோகம், சிவநாமயோகம். 2 3=5. எனவே அதன் எண் ஐந்து என்பதாம்

பெரியார் ஜனுதிபதியான தேதி 13-5-1967. அதன் கூட்டுஎண் 1 3 5 1 9 6 7 [...]


## மரண அறிவித்தல்

### திரு எஸ். சுவாமிநாதன்

யாழ்ப்பாணம் சைவ ஆசிரியர் கலாசாலையின் முன்னுள் அதிபர் திரு. எஸ். சுவாமிநாதன் அவர்கள் இறைவனடி எய்திவிட்டார். இவர் திருமதி பூதாத்தைப் பிள்ளையின் அருமைக்கணவரும், ஆனந்த குமாரசாமி (அதிபர், கதிரசன் கல்லூரி, நாவலப்பிட்டி), டாக்டர் சுசீந்திரராஜா (யாழ்ப்பாணக் கல்லூரி), பாஸ்கரன் (முன்னுள் ஆசிரியரும், முன்னுள் மயிலிட்டிக் கிராமசபைத் தலைவரும்), டாக்டர் மகேந்திரன் (இங்கிலாந்து), பாலேந்திரா (என்ஜினியர், பொதுமராமத்து இலாகா, கொஸ்லாந்தை), திருமதி மகேஸ்வரி, திருமதி இராஜேஸ்வரி, திருமதி புவனேஸ்வரி (ஆசிரியை, இராமநாதன் கல்லூரி), திருமதி பரமேஸ்வரி (ஆசிரியை, மகாவித்தியாலயம், கிளிநொச்சி), ஆகியோரின் தந்தையாரும், கே. சிவராசா (முன்னுள் அதிபர், யாழ்ரன் கல்லூரி), எஸ். விஸ்வநாதமுதலியார் (என்ஜினியர் புகையிரதப்பகுதி), எஸ். சண்முகலிங்கம் (காலநிலை அவதானிப்பாளர், கொழும்பு), பி. ஏ. சச்சிதானந்தம், (உற்பத்தி அதிபர், இரசாயனத்தொழிற்சாலை, பரந்தன்) ஆகியோரின் மாமனுரும் திரு. எஸ். வேலுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் தமையனுரும் ஆவார். அன்னுரின் இறுதிச் சடங்குகள் சனிக்கிழமை (17—5—69) மாலை 4 மணியளவில் மயிலிட்டியில் நடைபெறும். 1416

MANOHARA JAFFNA
Daily
2-30 6-30&9-30 P.M.
Pre-Poya Poya 4 Shows
Asah Parekh, Manoj Kumar
in
DO BADAN
(Eastman color)

முக்கிய அறிவித்தல்
தினசரி 2-30 காட்சிக்கு மட்டும், மாதர்களுக்கு எல்லா வகுப்புகளுக்கும் அரைக்கட்டணம்

ராஜா (யாழ்ப்பாணம்) 123வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
முத்துராமன் - காஞ்சனு நடித்த
பாமா விஜயம்

அந்தியேட்டி அழைப்பு

9-5-69 இராமேஸ்வரத்தில் சிவபதமடைந்த அமரர் குருநாதன் (சடையம்மா மடங்களின் அதிபதி) அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் 19-5-69 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலை சடையம்மா மடத்தில் நடைபெறும். தொடர்ந்து விசேட பூசையும் மகேசுர பூசையும் நடைபெறும். அன்பர்கள் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். தனித்தனி அழைப்புகள் அனுப்பாமைக்கு வருந்துகிறேன். க. குமாரசுவாமி. 1016

REGAL at JAFFNA
Daily 4 Shows
James Coburn
Gila Golan
in
"Our Man Flint"
(Cinemascope - Technicolor)

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
எம். ஜி. ஆர். அஞ்சலிதேவி நடித்த
சர்வாதிகாரி
(புத்தம் புதிய கொப்பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியாரின் பிறப்பு நேர யோகம், சிவராமயோகம். 2 3 = 5. எனவே அதன் எண் ஐந்து என்பதாம்.

பெரியார் ஜனுதிபதியான தேதி 13-5-1967. அதன் கூட்டெண் 1 3 5 1 9 6 7 32-5. ஐந்து என்பதாம். மாதம் ஐந்தாம் மாதம். வருஷக்கூட்டு எண் 1967 1 9 6 7 = 23 = 2 3 = 5. ராஜ்யசபையில் ஐந்து நாடுகள் அங்கம் வகித்தார். மாரகம் நிகழ்ந்த மாதம் ஐந்தாவது மாதம்.

ஈழநாடு 26-3-1969 வாரமலரில் எண்கள் செய்யும் விந்தைகள் என்ற ஆராய்ச்சிக்கட்டுரையில், 'ஐந்து' என்ற எண்ணிற்கும் "எட்டு' என்றஎண்ணிற்கும், அமைவு இல்லை. மனநிம்மதிக்குறைவு திடீர் மரணம், இவற்றை இவ்வெண்களின் தொடர்பு காட்டும் என்று விளக்கியுள்ளேன்.

இந்தியகுடியரசுஜாதகம் மேலும் பல விளக்கம் கொடுக்கின்றது. இதில் ஆளப்படுபவர் வெள்ளியாகவும் ஆட்சியாளர் சூரியனுகவும் களஞ்சிய கர்த்தா புதனுகவும் பங்குகொள்கின்றனர். இக்குடியரசில் ஆட்சியமைவுபெறில் அன்னூரின் ஜாதகத்தில் வெள்ளி, சூரியன், புதன் ஆகிய கோள்கள பெலமுடைத்தாகவேண்டும்.

பெரியார் டாக்டர் சாகிர் ஹுசேன் அவர்கள் ஜாதகத்தில், சூரியனும் புதனும் நீசகோள் இராகுவுடன்கூட்டுச் சேர்ந்து 12-ல் மறைந்து சந்திரனின் அட்டமத்துள் சனியனுலும், குடியரசு ஜாதக சனியனுலும் தாக்கப்படுகின்றனர். வெள்ளி கார் நோக்கற்று, மாரக ஸ்தானமாம் 2-ல் உறைகின்றார். இவ்வமைவுகள் ஜாதகருக்கும், இந்தியக்குடியரசுக்கும் அமைவுகாட்டுவதாயில்லை. டாக்டர் சாகிர் ஹுசேன் அவர்களின் மறைவு உலகமக்களைக் குறிப்பாக பாரத மக்களை மிளாத்துயரில் ஆழ்த்திவிட்டது. அன்னூரின் ஆத்மாசாந்தியடைய இறைவனுக்கு அஞ்சலி செலுத்துவோம்.


## தேவை

உதவி மனேஜர், ஒப்பரேட்டர், புக்கிங்கிளாக், ''செக்கர்'' தேவை. அடுத்தமாதம் தியேட்டர்தொடங்கவிருப்பதால் விண்ணப்பங்களை 19-‾-69க்கு முன் அனுப்பவும். விளம்பர இல. 1125, மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம் 1125


தியரே நோயாளிக்கு வைத்தியம் செய்து குணப்படுத்துவதற்குமுன்னர், உங்கள் நோய்க்குவைத்தியம்செய்து குணப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று ''டெயிலி நியூஸ்'' மற்றும் தேசியப்பத்திரிகைகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகளுக்கும் 'தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதையே நோக்கமாகக் கொண்ட தேசியஅர

வடக்கில் அளவுக்கதிகமான ஆசிரியர்களும் விஞ்ஞான கூடவசதியும் இருப்பதாக பிரசாரம் செய்து வடக்கில் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்குஇடையூறுசெய்வதற்கு தமக்குத்திருப்திதரக் கூடியவற்றைச் செய்துமுடித்த பின் இப்போது அச்சுவேலி, கரவெட்டி, அல்வாய் ஆகிய இடங்களில் தனிப்பட்ட முறையில் அமைக்கப்பட்ட பௌத்த பாடசாலைகளைப் பொறுப்பேற்றுச் சிங்கள

### ...தேர்தலும்

திரு. சுந்தரலிங்கம் அடுத்த பொதுத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியிலும் திருக்கோணமலைத் தொகுதியிலும் போட்டியிடவிருக்கிறார். இதை அவரே அறிவித்துள்ளார். இரண்டு இடங்களிலும் இரண்டு இலட்சியங்களுக்காக அவர் தேர்தலில் நிற்கிறார். ஆட்சி மன்றத்திலிருக்க வேண்டிய

...பெயர் பெற்றவன். தமிழன் தம்மவரைப் பிரித்துக் கொடுத்து வழிகாட்டினன். இரண்டிலும் நன்கு பாடம் கற்றுப் பயிற்சி பெற்ற நமது பெரும்பான்மைச் சிங்களச்சகோதரர்கள்தமிழ் மக்களை இன்று ''உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே'' என்று சூக்காட்டுகிருர்கள்.

இந்த நிலையிலும்கூட நமது மகாபுத்திசாலிகளான

# மலேஷியாவில் இனக் கலகம்

ஆசியாவிலேஜனநாயக வாழ்க்கைமுறையைப் பின்பற்றி முன்னேறிவரும் நாடுகளில் இதுவரை இன,மதப் பூசல்களால் பாதிக்கப்படாமல் தேசிய ஒற்றுமையைப் பாதுகாத்துவந்த மலேஷியாவில், கண்திருஷ்டிபட்டதுபோல் இப்போது இனக் கலவரம் வெடித்துப் பல உயிர்களைப்பலிகொண்டு சின்னபின்னமாகிக் கிடக்கிறது.

பொதுத்தேர்தல்கள்முடிவுகளைத்தொடர்ந்து திடீரென ஆரம்பமான இனக்கலவரத்தில் மலேஷியத் தலைநகரான கோலாலம்பூரிலும் அதை அடுத்த சிலாங்கூர் மாநிலத்திலும் ஐம்பதுக்கு மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் பொருட்சேதம் அதிக அளவில் ஏற்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன. இனக்கலவரங்களிலும் கலரத்தை அடக்கஇராணுவம், பொலிசார் சுட்டதிலும் மாண்டவர்தொகை நூற்றுக்கு அதிகமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கொலை,கொள்ளை, தீவைப்புப்பான்ற சம்பவங்கள் மலேஷிய மக்களை அதிர்ச்சியிலாழ்த்தியுள்ளன. நிலைமையைக் கட்டுக்குள்கொண்டுவருவதற்காக அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு ஊரடங்கு உத்தரவும் பல இடங்களில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது ஊரடங்கு உத்தரவை மீறுவோர் சுட்டுக்கொல்லப்படுவார் களென மலேஷிய வானெலி அடிக்கடி அறிவித்துவருகிறது. முதல்நாள் சம்பவத்தின் பின் சில மணி நேரம் கட்டுக்கடங்கியிருந்த போதிலும் அடுத்த நாள் புதிதாக பலவிடங்களிலும் வன்முறைச்செயல்கள் தலைதூக்கின இன, மதக் கலவரங்கள் தலைதூக்கிய நாடு எப்படியிருக்குமென்பதை, மலேஷியாவைப்போலவே ஜனநாயக வாழ்க்கைமுறையைப் பின்பற்றும் இலங்கையிலும் இந்தியாவிலும் வாழும் மக்கள் அனுபவத்தில் அறிவார்கள். இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் மலேஷியாவில் ஆட்சிமொழிச் சட்டம் சம்பந்தமாக சில வட்டாரங்களில் புதியபிரச்னைகள் தோன்றியபோது இலங்கையையும் இந்தியாவையும் உதாரணமாகக் காட்டி இன, மத ஒற்றுமையின் அவசியத்தை மலேஷியப் பிரதமர் வற்புறுத்தியிருந்தார். ஆனாலும் கண்திருஷ்டிபோல் இப்படி

## உலக மேடை

**எஸ். எம். ஜி.**

ஒரு சம்பவம் நடைபெறுமென அவர் எதிர்பார்த்திருந்தாரென்பதை கலவரம் தொடங்கியபின் அமைதியைப்பேணுமாறு நாட்டுமக்களுக்கு 'டெலிவிஷனில்' அவர் கண்கலங்கவிடுத்த வேண்டுகோளின் போது ''நடக்கவேண்டியது நடந்துவிட்டது'' என்றுகூறியதிலிருந்துஅறியக்கூடியதாக இருக்கிறது. எப்படியோ ஆசியாவில் இன, மதப் பூசல்களுக்குத் தப்பியிருந்த ஒரேயொரு ஜனநாயகநாடான மலேஷியாவிலும் இந்த ஆபத்து வந்துவிட்டது. இதைத்தேசீய ஐக்கியத்திலும் இன, மத ஒற்றுமையிலும் நம்பிக்கையும் ஆர்வமுமுள்ள துங்கு அப்துல் ரஹ்மான் சமாளித்து அமைதியை நிலைநாட்டிவிடுவார் என்ற நம்பிக்கை பலருக்கும் இருக்கிறது. மலேஷியாவில் இன, மத பூசலை முளையிலேயே கிள்ளிவிடத்தவறினல் மலேஷியாவின் சுதந்திரத்துக்கு மட்டுமல்லாது ஆசியாவில் ஜனநாயகத்துக்கே ஆபத்து ஏற்படலாமென்று சொல்லலாம்.



மலேஷியாவில் சுமார் ஒரு கோடி மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் மலாய் மொழிபேசும் மலாயாவைச் சொந்த நாடாகக் கொண்ட மலாய் மக்கள் 53 சத விகிதத்தினர். சீனர்கள் சுமார் 37 விகிதத்தினர். இந்தியர், இலங்கையர் உட்பட மற்றும் சிறுபான்மையினர் 10சத விகிதத்தினர் வாழ்கின்றனர். மலாயர், சீனர். இந்தியர் ஆகியோரைச் சேர்த்துக் கூட்டணி ஒன்றை உருவாக்கிய துங்கு அப்துல் ரஹ்மான் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி செலுத்தி வந்தார். இம்முறை நடைபெற்ற மூன்ருவது தேர்தலில் மலேஷியா மலேஷியர்களுக்கே என்ற கோஷத்துடன் அகண்ட மலேஷியா இஸ்லாமியச் கட்சியினரையும் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூறிய ஆட்சிமன்ற முறையை விரும்பாத பீகிங் கம்யூனிஸ்ட் கட்சியினரையும் நிராகரித்துத் துங்குவின் கூட்டணியையே மீண்டும் ஆட்சி பீடத்திற்கு மலேஷிய மக்கள் தெரிவு செய்தனர். ஆனுல் பெரும்பான்மைப் பலம் குறைந்துவிட்டது. ஒன்பது ராஜ்யங்கள் துங்குவை கைவிட்டு விட்டன. துங்கு மேற்கத்திய சார்புடையவர்.

வகுப்பு வாதத்தையும் தீவிரவாதத்தையும் நிராகரித்த மலேஷிய மக்கள் மேற்கத்திய சார்பையும் விரும்பவில்லை என்பது தான் இதன் அர்த்தம்.

தொழில் துறையிலும், வர்த்தகம் மற்றும் உழைப்பிலும் சீனர்களும் இந்தியர்களும் முன்னணியில் நிற்கின்றனர். சீனர் பொருளாதார வளம் பெற்றிருப்பது மலாயர்களுக்குப் பொருமல் மலாயரின் கையில் ஆட்சி அதிகாரமிருப்பது சீனர்களுக்கு வயிற்றெரிச்சல். இது தான் இன்று இனக்கலவரமாக வெடிப்பதற்குக் காரணம்.

இதே மனக்கசப்பு நீடிக்காமல் தேசிய ஐக்கியத்தைக் காப்பாற்றுவதில் தான் துங்குவின் வெற்றி மட்டுமல்ல, மலேஷியாவினதும், ஆசியாவில் ஜனநாயகத்தினதும் வெற்றி பெரிதும் தங்கியிருக்கிறது,

தும் தென்னிலங்கையில் எங்கேயோ ஒரு மூலையில் ஒரு கிராம சபையோ பட்டினசபையோ, ''மாவட்ட சபை வேண்டாம்'' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியதுதான் தெரியும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த இதர மாகாணங்களிலுள்ள சகலஉள்ளூராட்சி மன்றங்களும் ''மாவட்ட சபைகள் வேண்டாம்'' என்று தீர்மானம் நிறைவேற்றின. சனசமூக நிலையங்கள், கிராமமுன்னேற்றச்சங்கங்கள் மற்றும் சங்கங்கள் பற்றிச்சொல்லத் தேவையில்லை.

இதே சமயம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராம சபையும் திருக்கோணமலை மாவட்டத்தைச்சேர்ந்த ஒரு கிராமசபையும் தான் மாவட்டசபை வேண்டுமென தீர்மானங்கள் நிறைவேற்றின.

மாவட்டசபை யாருக்கு நல்லது யாருக்குக் கெடுதி என்பது வேறு விஷயம். ஆனுல் கட்சிவேறுபாடு சிங்களமக்கள் மத்தியிலும் உண்டு. தமிழ் மக்கள் மத்தியிலும் உண்டு. ஆனுலும் ...

இங்கு இல்லாத நாம் தமிழர் இயக்கத்தையும் எங்கோ, எப்படியோ இருக்கும் திராவிடமுன்னேற்றக் கழகங்களையும் தடைசெய்யும்படிகோரி தென்னிலங்கையில் தீர்மானங்கள் நிறைவேற்ருத உள்ளூராட்சி மன்றங்களோ, மற்றும் பொதுவான சங்கங்களோ இயக்கங்களோ இல்லையென்று சொல்லுமளவுக்கு தினசரி பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவைமட்டுமல்ல, சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும், நீதிமன்ற மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் இரு வேறு திசையிலுள்ள ஐக்கிய தேசீயக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மற்றும் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஆதரித்தன. இதுபோல் எத்தனையோ சம்பவங்களையும் சந்தர்ப்பங்களையும் எடுத்துக்காட்டலாம்.

கல்தோன்றி மண்தோன்ருக் காலத்துக்குமுன் தோன்றிய மூத்தகுடி, உலகிற்கு நாகரிகத்தையே உணர்த்தியவர்கள் என்று பெருமை பேசும் தமிழ் மக்கள் தமக்குள் பலபல பிரிவாகப் பிரிந்து, ஒருவர் மீது ஒருவர் வசைபாடிக்கொண்டிருப்பதால், மற்றவர்களுக்கு நல்ல வாய்ப்பு!



வெஸ்லி சினிமா (மானிப்பாய்)
எம். ஜி. ஆர். அஞ்சலிதேவி நடித்த
சர்வாதிகாரி
(புத்தம் புதிய கொப்பி)

ராணி [யாழ்ப்பாணம்] [தினசரி 3காட்சிகள்]
* ஜெய்சங்கர் * விஜயகுமாரி நடித்த
ஜீவனும்சம்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
* சிவாஜிகணேசன் * ஜெயலலிதா நடித்த
கலாட்டா கல்யாணம்

இங்ஸ்லி (கொழும்பு) அயின் (மன்னர்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
நாகேஷ் - சுந்தரராஜன்-வசந்தா- மனோரமா நடித்த
ஆலயம்

இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் பிளாஸா மைலன் (கொழும்பு)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)



ரவிச்சந்திரன் - காஞ்சனு - நாகேஷ் நடிக்கும்
அதே கண்கள்



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மே மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org